# பதுக்கப்பட்ட 10,000 மூடை பருப்பு வகைகள் பிடிபட்டன!

Registered as a News Paper in Ceylon    விலை சதம் 15  ★ ★

# ஈழநாடு

THE EELANADU

National Tamil Daily

தபால் பெட்டி எண் : 49
போன் : 389

மலர் 12
இதழ் 250
தேசிய தினசரி

யாழ்ப்பாணம்  ஐப்பசி 2  ஷஃபான் 17  திங்கட்கிழமை (19-10-70)



போன் 7199

பொ. அம்பலவாணர்
தங்க வைர
நகை வியாபாரம்
119, கஸ்தூரியார் ரோட்,
யாழ்ப்பாணம்.

அல்கத்தீன் பைப்புகள்
அன்டன் P.V.C.
பைப்புகள்
கல்வனைஸ்ட் பைப்புகள்
மலிவான விலையில்
கிடைக்குமிடம்:-
கதிர் ஹாட்வெயர்ஸ்
11/1, ஸ்ரான்லி வீதி
யாழ்ப்பாணம்
தொலைபேசி: 7130

கொழும்பு, ஞாயிறு

இந்த வாரத்தில் விலைக் கட்டுப்பாட்டுப் பரிசோதகர்கள் புறக்கோட்டைப் பகுதியில் நடத்திய திடீர் சோதனைகளின்போது வியாபாரிகளிடமிருந்து சுமார் பத்தாயிரம்பருப்பு மூடைகளைக் கைப்பற்றினார்கள் இந்தப் பரிசோதனையில் பிடிபட்டுள்ளவர்களில் பெரும்பாலோர் டி. ஆர்: பி. இந்தியர்கள் என்று தெரிய வருகிறது இவைகள் வெளியூர் சில்லறை வியாபாரிகளுக்கு விற்கப்பட்டதாகவும், அவைகளை அப்புறப்படுத்துவதற்கு ஏற்பாடுகள் நடைபெற்றுக் கொண்டிருப்பதாகவும் மேற்படி வியாபாரிகள் தெரிவித்தார்கள் என்றும், ஆனால் சிட்டைகளையும் இதர பத்திரங்களையும் பரிசோதித்த பொழுது இல்லாத கடைகளின் பெயர்களுக்கு இவை பதியப்பட்டிருப்பதாகத் தெரிய வந்ததாம்.

பிடிபட்ட பொருட்களில் பெரும்பாலுங் கூட்டுறவு ஸ்தாபனங்களுக்கு கொடுக்கப்படுவதற்காக கூட்டுறவு மொத்தவிற்பனவு ஸ்தாபனத்திற்கு வழங்கப்பட்ட பருப்பும் பாசிப்பயறுமெனத் தெரியவந்துள்ளது.

இவ்விதச் செயல்களினால் பருப்பு விநியோகம் இலங்கை வர்த்தக கூட்டுஸ்தாபனத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. (சி. பி. ஏ)

# கட்டுபெத்தையில் அடுத்த மாதம் புதிய பல்கலைக்கழகம் உதயம்

## வடக்கு கிழக்குபற்றி விரைவில் தெரியும்

கொழும்பு ஞாயிறு

கட்டுபெத்த கனிஷ்ட தொழில் நுட்ப பாடசாலை அடுத்த மாதத்திலிருந்து விஞ்ஞான தொழில் நுட்ப பல்கலைக்கழகமாக மாற்றப்படவிருக்கிறது. இத்தகவலை கல்வி அமைச்சின் நிரந்தரக் காரியதரிசி தெரிவித்துள்ளார்.

1966-ம் ஆண்டில் ஐ. நா. ஸ்தாபனத்தின் உதவியுடன் இக்கனிஷ்ட பல்கலைக்கழகம் அமைக்கப்பட்டது.

கட்டுபெத்த கனிஷ்ட பல்கலைக்கழகம் அடுத்த மாதத்திலிருந்து விஞ்ஞான தொழில் நுட்பப் பல்கலைக்கழகமாக மாற்றப்படவிருப்பதால், கூட்டணி அரசாங்கம் தெற்கிலும் ஒருபல்கலைக்கழகம் நிறுவப்படுமென அளித்திருந்த வாக்குறுதி நிறைவேற்றப்படுகிறதென்று கருதப்படுகிறது.

கிழக்கு மாகாணத்துக்கு விஜயம் செய்துள்ள உதவிக் கல்வி அமைச்சர் நாளை வடக்கு மாகாணத்துக்கும் விஜயம் செய்து திரும்பிய பின்னர் அரசாங்கம் வாக்குறுதியளித்தபடி வடக்கு, கிழக்கு மாகாணங்களில் பல்கலைக்கழகங்கள் அமைப்பது பற்றிய முடிவு தெரிய வருமென்றும் அரசாங்க வட்டாரங்களில் கூறப்படுகிறது. (சி பி ஏ)

## டாக்டர் குலரத்தின மரண விசாரணை

### இரண்டாவது மனைவி சாட்சியம்

காலி, ஞாயிறு

டாக்டர் குலரத்தினவின் திடீர் மரணம் சம்பந்தமான விசாரணையின் போது அவரது இரண்டாவது மனைவியான சுசீலா ஜினதாரி தவிமிக்க குலரத்தின சட்சியமளித்தார்.

டாக்டர் குலரத்தின தமது முதல்மனைவியான பத்மினி குலரத்தினவை நஞ்சூட்டிக் கொன்றதாக குற்றஞ்சாட்டப்பட்டிருந்தது தெரிந்ததே. அந்த வழக்கில் அப்பீல் நீதிமன்றத்தினால் அவர் விடுதலை செய்யப்பட்டிருந்தார்.

டாக்டர் குலரத்தினவின் ... இறந்து விட்டதாக டாக்டர்கள் தெரிவித்தனம் டாக்டர் நாணயக்காராவும். பணியாள் மாட்டினுர் சாட்சியம் அளித்தார்கள்.

## ஆசிரியர்சங்க பொன்விழா

யாழ்ப்பாணம், திங்கள்

இம்மாதம் 21ந் திகதி புதன்கிழமை வேம்படி மகளிர் கல்லூரி மண்டபத்தில் காலை 10 மணிக்கு ஆசிரியர் சங்கப் பொன்விழா நடைபெறவிருக்கிறது. வடமா

## தந்தைக்கு சர்வதேச விருது!

### மகள் பெற்றார்

புதுடில்லி, அக் 18

தந்தையாருக்கான சர்வதேச விருதை மகள் பெற்றுக் கொண்டார், காலஞ்சென்ற இந்தியப் பிரதமர் அமரர் ஜவர்கர்லால் நேருவுக்கு உலக அமைதிச்சபை உலக அமைதிக்காக அவர் ஆற்றிய சேவைக்காக வழங்கிய விருதை அவரதுபுதல்வியான இந்தியப் பிரதமர் திருமதி இந்திராகாந்தி இன்று பெற்றுக்கொண்டார்,

## சுவீப் முடிவுகள்

உள்ளூராட்சித் தலைவர்களுக்கு

## உயர்ரக சேட்டுகள் மாயமாய் மறைந்தன!

கொழும்பு, சனி

டெட்ரோன், நைலோன், போன்ற உயர்ரக சேட்டுக்கள் திடீரெனக் கடைகளிலிருந்து மாயமாக மறைந்துவிட்டன. தீபாவளிப் பண்டிகையை முன்னிட்டுத் துணி வாங்கச் சென்ற பலரும் உயர்ரக சேட்டுகள் மறைந்ததைத் தொடர்ந்து இதர ரக சேட்டுக்களும் மறைந்துவிடலாமென்ற அச்சத்தில் இரண்டாம் ரக சேட்டுக்களை வாங்கிச் சென்றனர். தரம் குறைந்த மலிவான சேட்டுக்கள் நடைபாதை வியாபாரிகளிடம் தாராளமாக வாங்கக்கூடியதாக உள்ளன.

சேட்டுக்களுக்குக் கட்டுப்பாட்டுவிலை விதிக்கப்படுமெனகைத்தொழில் அமைச்சர் அறிவித்திருந்ததைத் தொடர்ந்தும் கட்டுப்பாட்டு விலை விபரம் இன்றிரவு விசேஷ வர்த்தமானியில் வெளியிடப்படுமென அறிவிக்கப்பட்டதைத்தொடர்ந்துமே உயர்தர ரக சேட்டுக்கள் பதுக்கப்பட்டுவிட்டதாகக் கூறப்படுகிறது கட்டுப்பாட்டுவிலை விதிக்கப்படவிருப்பதைத் தொடர்ந்து உயர்ந்த ரக சேட்டுக்களை வாங்குவதற்காக தீபாவளிப் பண்டிகையைக் கொண்டாடாதவர்களும் கடைகளில் முண்டியடித்துக் கொண்டு சேட்டுக்கள் வாங்க வந்திருந்தனர்.

கட்டுப்பாட்டுவிலை விதிக்கப்பட்டதும் அந்த விலை தங்கள் உற்பத்திச் செலவுக்கு மாறானதென அமைச்சுடன் பேச்சுவார்த்தை நடத்தலாமென்றும் அதுவரை சேட்டுகளை விற்பனை செய்யாமலிருக்கும்படியும் சேட் தயாரிப்பாளர்கள் சிலர் வர்த்தகர்களுக்கு ஆலோசனை கூறியுள்ளதாகவும் கூறப்படுகிறது. (சி பி ஏ)

## இந்த சேட்டுகளுக்கு விலை கட்டுப்பாடில்லை!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூட்டிக் கொன்றதாக குற்றஞ்சாட்டப்பட்டிருந்தது தெரிந்ததே. அந்த வழக்கில் அப்பீல் நீதிமன்றத்தினுல் அவர் விடுதலை செய்யப்பட்டிருந்தார்.

டாக்டர் குலரத்தினுவின் மரணவிசாரணைகளை காலி திடீர் மரணவிசாரணை அதிகாரி திரு. விக்கிரமசிங்கா நடத்தினுர். பிரேதபரிசோதனைகளை காலி ஜே. எம். ஓ. டாக்டர் சரவணபவானந்தம் நடத்தினுர்.

திருமதி சுசீலா தமது சாட்சியத்தில் கூறியதாவது:

17ம் திகதி காலை 4-30 மணியளவில் எனது கணவர் வயிற்றில் வலி ஏற்பட்டிருப்பதாக என்னிடம் கூறினுர் நான் அவருக்கு ஒரு கோப்பை கோப்பி கொடுத்தேன். 5-15 மணியளவில் மீண்டும் வலி இருப்பதாகச் சொன்னுர். நான் காலி ஆஸ்பத்திரியில் இருந்து டாக்டர் நாணயக்காரவை அழைத்தேன்.

அவர் வந்துபார்த்து மருந்து கொடுத்துச் சென்றுர் இரண்டாவது தடவையாக, 5-30 மணியளவில் டாக்டர் அழைக்கப்பட்டார். மூன்றுவது தடவையாக டாக்டர் நாணயக்காரவை அழைத்த பொழுது அவர் டாக்டர் லாதுவ ஹெட்டியையும் அழைத்து வந்தார். 7 30 மணியளவில் எனது கணவர்

யாழ்ப்பாணம், திங்கள்

இம்மாதம் 21 ந் திகதி புதன்கிழமை வேம்படி மகளிர் கல்லூரி மண்டபத்தில் காலை 10 மணிக்கு ஆசிரியர் சங்கப் பொன்விழா நடைபெறவிருக்கிறது. வடமாகாண ஆசிரியர் சங்கப் பொதுக் கூட்டத்தில் உதவிக் கல்வியமைச்சர் திரு. பி. வை. துடாவை பிரதம விருந்தினராக் கலந்து கொள்கிருர். அக்கூட்ட அகில இலங்கை ஆசிரியர் சங்க- தேசிய ஆசிரியர் சங்க பொன் விழாக் கொண்டாட்டமாகும்.

மேற்படி சங்கத் தலைவர் திரு. க. மகாலிங்கசிவம் தலைமையில் நடைபெறும் இவ்வைபவத்தில் வடமாநில வித்தியாதிபதி திரு. வெ. சங்கரலிங்கம், ஹன்டி பேரின்பநாயகம, லங்கா ஜாதிககுரு சங்க நிர்வாகக் காரியதரிசி திரு. எல். ஆரியவன்ச, அகில இலங்கை ஆசிரிய சங்க சம்மேளனத் தலைவர் திரு. அ. வைத்திலிங்கம், தேசிய ஆசிரிய சங்கத் தலைவர் திரு. எல். எம். பெரேரா ஆகியோர் உரையாற்றவிருக்கின்றனர்.

இதைத் தொடர்ந்து உதவிக் கல்வியமைச்சருக்கு மேற்படி சங்கம் ஒரு மதிய போசன விருந்து அளித்துக் கௌரவிக்கும்.

இக்கனிஷ்ட பல்கலைக்கழகம் அமைக்கப்பட்டது.

கட்டுபெத்த கனிஷ்ட பல்கலைக்கழகம் அடுத்தமாதத்திலிருந்து விஞ்ஞான தொழில் நுட்பப் பல்கலைக்கழகமாக மாற்றப்படவிருப்பதால்,

## இங்கேயே உற்பத்தி

கோட்டை ஞாயிறு

இலங்கைப் போக்குவரத்துச் சபைக்குத் தேவையான உதிரிப்பாகங்களை இங்கேயே உற்பத்தி செய்து கொள்ளக் கூடியதாக வேலைத் தலமொன்றை இ. போ. சபை வமைக்கவிருக்கிறது இத் தொழிற்சாலைக்குத் தேவையான இயந்திர சாதனங்களை வழங்குவதற்கு இந்தியாவும் செக்கோஸ்லவாகியாவும் முன் வந்துள்ளன.

......

காணி அபிவிருத்தி

## இலாகாவை மூடத்தீர்மானம்

கோட்டை சனி

இவ்வருடம் டிசம்பர் மாதத்துடன் காணி அபிவிருத்தி இலாகாவை மூடுவதற்கு காணி அமைச்சு தீர்மானித்துள்ளது.

# சுவீப்முடிவுகள்

கொழும்பு ஞாயிறு

நேற்று இழுக்கப்பட்ட தேசியலொத்தர்சபை சுவீப் சீட்டிழுப்பு முடிவுகள வருமாறு.

முதலாவது பரிசு

10 A 0042 ரூ. 85,990

இரண்டாவது பரிசு

28 N 0336 ரூ. 34,396

மூன்றுவதுபரிசு

10 B 0630 ரூ. 8,599

தலா ரூபா 429 95 சதம் ஆறுதல்பரிசுபெறும்100 டிக்கட்டுகள் வருமாறு.

| | |
|---|---|
| 31 U 0849 | 07 O 0401 |
| 24 L 0394 | 03 M 0616 |
| 30 X 0547 | 10 O 0150 |
| 05 K 0652 | 17 L 0418 |
| 08 S 0537 | 15 Z 0037 |
| 14 Z 0668 | 05 L 0068 |
| 21 W 0199 | 02 L 0180 |
| 20 T 0273 | 19 Y 0435 |
| 07 B 0272 | 18 D 0180 |
| 31 J 0783 | 33 R 0192 |
| 18 V 0807 | 31 M 0518 |
| 04 V 0085 | 29 J 0324 |
| 15 J 0541 | 01 P 0139 |
| 35 K 0289 | 12 L 0026 |
| 08 G 0295 | 11 K 0004 |
| 10 V 0483 | 09 V 0927 |
| 04 A 0729 | 22 C 0617 |

| | |
|---|---|
| 31 P 0160 | 05 A [illegible]065 |
| 36 L 0372 | 11 X 0235 |
| 03 R 0121 | 36 R 0994 |
| 14 O 0076 | 15 U 0859 |
| 15 C 0340 | 02 B 0574 |
| 05 M 0852 | 17 D 0080 |
| 31 M 0981 | 08 C 460 |
| 02 R 0095 | 29 R 0085 |
| 03 C 0101 | 17 A 0108 |
| 19 N 0413 | 16 L 0557 |
| 16 Y 0985 | 19 B 0861 |
| 20 P 0534 | 12 T 0759 |
| 13 R 0783 | 16 Q 0692 |
| 32 J 0965 | 12 C 0312 |
| 34 F 0940 | 09 A 0314 |
| 10 N 0843 | 03 X 0628 |
| 27 C 0106 | 19 M 0110 |
| 24 U 0179 | 09 Y 0271 |
| 19 Q [illegible]267 | 02 S 0853 |
| 03 B 0342 | 27 D 0272 |
| 06 Y 0271 | 26 J 0129 |
| 01 R 0119 | 21 Y 0235 |
| 24 Y 0683 | 26 Q 0035 |
| 03 X 0107 | 24 E 0758 |
| 35 R 0085 | 04 F 0353 |
| 21 Q 0385 | 34 Y 0336 |
| 11 H 0811 | 14 E 0968 |
| 21 X 0336 | 06 J 0382 |
| 07 C 0046 | 05 O 0005 |
| 32 Z 0165 | 35 N 0958 |
| 27 M 0017 | 22 M 0564 |
| 11 N 0745 | 08 R 0538 |
| 19 W 0794 | 04 C 0622 |

(இவையாவும் உறுதிப் படுத்தப்பட வேண்டும்.)

திருமதி இந்திராகாந்தி இன்று பெற்றுக்கொண்டார்,

உள்ளூராட்சித்

தலைவர்களுக்கு

## பொறுப்புக் குறையும்

கொழும்பு ஞாயிறு

வரி அறவிடப்படும் பொறுப்பு உள்ளூராட்சிமன்றத் தலைவர்களிடமிருந்து நீக்கப்படவிருக்கிறது. இதற்கான நடவடிக்கைகளை உள்ளூராட்சி அமைச்சு மேற் கொண்டுள்ளது.

உள்ளூராட்சி மன்றங்களிலுள்ள காரியதரிசிகள் கமிஷனர்களிடம் இந்தப் பொறுப்பு ஒப்படைக்கப் படுமெனத் தெரிகிறது.

.. ...

பீடிஇலை இறக்குமதி

## கூ. மொ. வி. பொறுப்பேற்கும்

கொழும்பு, ஞாயிறு

பீடிஇலை இறக்குமதியை கூட்டுறவு மொத்த விற்பனவு ஸ்தாபனமே இனிச் செய்யவுள்ளது பீடி இலை இறக்குமதி தனியாரே செய்து வருகின்றனர், இதனை கூ, மொ, வி, ஸ்தாபனமே இனிச் செய்வதற்கான நடவடிக்கைகள் மேற் கொள்ளப்பட்டுள்ளன,

வெளியிடப்படுமென அறி

## இந்த சேட்டுகளுக்கு விலை கட்டுப்பாடில்லை!

கொழும்பு, ஞாயிறு

சாயம் போடப்பட்ட வேலைப்பாடமைந்த இலங்கைச் சேட்டுகளுக்கு விலைக் கட்டுப்பாடு விதிக்கப்பட மாட்டாதெனத் தெரிகின்றது.

சேட்டுகளுக்கான கட்டுப் பாட்டு விலை விவரம் காலம தாழ்த்தியே வெளியிடப்படுமெனத் தெரியவருகிறது.

உயர் ரக சேட்டுகள் எல்லாம் பதுக்கப்பட்டுவிட்டதைத் தொடர்ந்தே கட்டுப் பாட்டு விலைப் பட்டியலைக் காலம் தாழ்த்தி வெளியிட அரசு முடிவுசெய்துள்ளது.

# பௌத்த மதத்துக்கு உன்னதமான இடம

### கலாச்சார அமைச்சர் நடவடிக்கை

கொழும்பு, ஞாயிறு

பௌத்த மதத்தை உன்னதமான பெருமைக்குரிய இடத்தில் வைப்பதற்கான நடவடிக்கைகளைக் கலாச்சார அமைச்சர் திரு எம். எஸ். குலத்திலக்கா எடுத்துள்ளார்.

பௌத்தத்தின் நிலைமை பற்றியும், அதனை உயர்ந்த பெருமைக்குரிய ஸ்தானத்தில் வைப்பதற்கு உரிய யோசனைகளைத் தெரிவிக்கும் படியும் அமைச்சர் குலத்திலக்கா தலைசிறந்த பௌத்த பிரமுகர்களைக் கோரியுள்ளார்.

யோசனைகளைத் தெரிவிப்பதற்குத் தலைசிறந்த பௌத்த பிரமுகர்களைக் கொண்ட குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது.

## நெல் உற்பத்திபற்றிய புள்ளி விபரங்கள்!

### கோருகிருர் காணி அமைச்சர்

கோட்டை, ஞாயிறு

நாட்டின் முக்கிய நெற் செய்கைப் பிரதேசங்களில் உள்ள அரசாங்க அதிபர்களுக்கு அவ்வப்பகுதியின் நெற்சாகுபடி பற்றி விவரமான புள்ளிவிபரங்களைச் சமர்ப்பிக்குமாறு காணி, விவசாய அமைச்சர் திரு ஹெக்டர் கொப்பேகடுவா உத்தரவிட்டுள்ளார்.

நாட்டின் நெல் உற்பத்தி பற்றி விபரமாக அறிவதற்காகவே விவசாய அமைச்சர் மேற்படி நடவடிக்கையை எடுக்கிருர்; தற்போது கிராம பயிற்செய்கைக் குழுக்களின் மூலம் பெறும் புள்ளிவிபரங்கள் அமைச்சருக்கு திருப்தியளிக்கவில்லை அரசாங்க அதிபர்களுக்கு அனுப்பிய உத்தரவில் இதை அவர் குறிப்பிட்டுள்ளார்.

# மன்னூர் தேர்தல் ஆட்சேப வழக்கு

# 'முஸ்லிம் அல்லாதவர்களும் பள்ளிக்கு செல்வதுண்டு'

## மஜித் மௌலவி சாட்சியம்

யாழ்ப்பாணம், திங்கள்

'பள்ளிவாசல்கதவுக்குப் பக்கத்தில் எம். பி. அழகக்கோன் வந்து நின்றுர் கதீஸ் பிரசங்கத்தைநிறுத்தினேன். எம். பி. எல்லாருக்கும்கைகூப்பிவணங்கி, 'என் பொருள், பணம், பார்வையை இழந்துவிட்டேன்' இந்த முறையும் பாராளுமன்றத்துக்கு அனுப்புங்கள், உங்கள் சேவையை வடிவாகச் செய்வேன்' என்றுசொல்லி விட்டு சென்று விட்டார். நான் திரும்பவும் கதீஸ் ஆரம்பித்து 12 நிமிடம் வரை நடத்தினேன். பின் பள்ளியைவிட்டுப் போன போது ஆட்கள் கூடி நின்ருர்கள். எம். பி. அழகக்கோன் மரத்தடியில்நோட்டீஸ் கொடுத்துக்கொண்டிருந்தார். அழகக்கோன் ஒரு முஸ்லீம் அல்லாதவர். இதற்கு முன்பும் முஸ்லிம் அல்லாதவர்களையும் பள்ளியில் கண்டிருக்கிறேன்'.

மன்னூர்தேர்தல்ஆட்சேப வழக்கில் சாட்சியமளித்த மஜீத்மௌலவி மேற்கண்டவாறு கூறினுர்.

இவ்வழக்கு யாழ்ப்பாணத்தில் நீதியரசர் வின்சன் தாமோதரம் முன்னிலையில் நேற்று நான்காவது தினமாக விசாரணை செய்யப்பட்டது,

மஜீத் மௌலவி சாட்சியமளிக்கையில் தொடர்ந்து கூறியதாவது:-

மன்னூரில் கனகாலமாக இருந்தேன், சுமார் 5 வருடங்கள்வரை அங்கிருந்தேன்; அழகக்கோனைத் தெரியும், அவர் மன்னூர்த் தொகுதி எம். பி. யாக இருந்தார். மனுதாரரான ரஹிமைதெரியும் மன்னூரில் மொகதீன் ஜும்மா பள்ளியில் 4 வருடங்கள்வரை கடமையாற்றினேன். 1967-ல் அந்தப் பள்ளியை விட்டு விலகினேன். அங்கு நான் இமாம் கதீப்பாக கடமையாற்றினேன். எந்தப்பள்ளிவாசலிலும் ஒருநாளைக்கு 5 தொழுகையிருக்கிறது. வெள்ளிக்கிழமைத் தொழுகையிலும் கதீப் பங்குபற்றுவார். தொழுகை ஆரம்பிப்பதை மொகதீன் அறிவிப்பார் பள்ளிவாசலிலுள்ள உயர்ந்த பீடத்தில் ஏறி வழமையாகச் சொல்வதைச் சொல்லுவார்

பள்ளிவாசலுக்குகர்த்தாக்கள் இருக்கின்றுர்கள், நான் அதன்பின் ஊதுபத்தி வியாபாரம் செய்தேன். மன்னூரில் ஒரு வீட்டை வாடகைக்கு எடுத்தேன் வியாபார சம்பந்தமாக பல இடங்களுக்குச் சென்றுவந்தேன். மார்க்கப் பிரசங்கத்தை கதீஸ் என்பார்கள்' இது அரபு மொழியிலிருந்துவந்த சொல்லாகும் நான் பள்ளி வாசலுக்குச் செல்வதுண்டு. மக்கள் வாழுகின்ற முறையைச் சொல்லுவேன். அதனை தப்ளிக் என கூறுவார்கள்.

தாராக்குண்டு பள்ளி வாசல் தெரியும். கடந்த பொதுத்தேர்தல் ஞாபகமிருக்கிறது. அந்தநேரத்தில் தாராக்குண்டு மீரா பள்ளி வாசலில் கதீஸ் பிரசங்கம் செய்தேன். மே மாதம் 3ம் வெள்ளிக்கிழமை போனேன் காலை 11-30 மணிக்கு பள்ளிக்குப் போனேன், அத

(4-ம் பக்கம் பார்க்க)

## 'போயாவை மாற்ற வேண்டாம்'

கோட்டை, ஞாயிறு

'போயாவிடுமுறை நாட்களில் மாறுதல் எதுவும் செய்வதை நிறுத்தவும்' என்று சிங்கள பௌத்த சன்விதனயா என்ற ஸ்தாபனம் பிரதமருக்கு எழுதியுள்ள கடிதமொன்றில் கேட்டுள்ளது. கூட்டணி தேர்தல் விஞ்ஞாபனத்தில் போயா விடுமுறைதின மாற்றம் பற்றி எதுவும் தெரிவிக்கப்படவில்லை யென்றும். போயாவிடுமுறை சிங்கள பௌத்த மக்களின் நியாயமான உரிமைக் கோரிக்கை யென்றும் அது தனது கடிதத்தில் தெரிவித்துள்ளது.

## உப தேர்தலில் உடுகம

கொழும்பு. ஞாயிறு

மாத்தளைத் தொகுதி ஆட்சிமன்ற உறுப்பினரான முன்னுள் படைத்தளபதி மேஜர் ஜெனரல் ரிச்சார்ட் உடுகம மாத்தளை மாநகரசபையின் நான்காம் வட்டார உப தேர்தலில் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி அபேட்சகராகப் போட்டியிடுகின்ருர். (சி பீ ஏ

## குறைந்த விலை சாப்பாடு

கோட்டை, ஞாயிறு

அரிசிவிலை குறைந்துள்ளதால் ரயில்களிலுள்ள இலங்கை ரயில்வே உணவுச்சாலைகளில் சாப்பாடு 10 சதம் குறைக்கப்பட்டுள்ளதாம் போக்கு வரத்து அமைச்சரின் உத்தரவின் மீது இவ் விலைக்குறைப்புச் செய்யப் பட்டுள்ளது

.. ...

## ஓராண்டுக்குள் 4 மாற்றங்கள்

பருத்தித்துறை, ஞாயிறு

ஓராண்டு காலத்துக்குள் இப்பகுதி ஆசிரியர் ஒருவருக்கு நான்கு மாற்றங்கள் கிடைத்துள்ளன. நெல்லியடி மத்திய மகாவித்தியாலயத்தில் ஆசிரியராகக் கடமையாற்றிய பண்டிதர் க. வீரகத்தி கடந்த ஆண்டு ஆவணி மாதப் பிற்பகுதியில் வரணி நாவற்காடு பாடசாலைக்கும் அங்கிருந்து பின் வரணி மகாவித்தியாலயத்திற்கும், சில நாட்களில் கண்டி ரஜவெல மகா வித்தியாலயத்திற்கும், இறுதியாக கரவெட்டி விக்னேஸ்வராக் கல்லூரிக்கும் மாற்றப்பட்டுள்ளார்.

## தமிழில் தேறியவர்களுக்கு முதலிடம்

சென்னை, அக். 18

தமிழ்மொழியில் போதனை பெற்று, பரீட்சைகளில் தேர்ச்சிஅடைந்தவர்களுக்கு உத்தியோகங்களில் முதல் இடம் வழங்கத் தமிழ்நாடு அரசு முடிவுசெய்துள்ளது.

இத்தகவலைத் தமிழ்நாடு அமைச்சர் திரு. மாதவன் தெரிவித்துள்ளார்.

## கஷ்டம்

யாழ்ப்பாணம், திங்கள்

கிளிநொச்சி, பரந்தன், நீவில், உருத்திரபுரம், வட்டக்கச்சி போன்ற விவசாய இடங்களில் தொடர்ந்து மழை பெய்கின்றது. மழைக்கு முன்பு புழுதிவிதைப்புச் செய்த வயல்களிலும் வெள்ளம் அதிகரித்துள்ளது.

தாழ்ந்த பிரதேசங் வயற் காணிகளில் உழ முடியாது கமக்காரர்கள் கஷ்டப்படுகின்றனர். விதைப்புக்காலம் போய்க் கொண்டிருப்பதால் எஸ். ஆர். என்ற குறுகிய கால விதைநெல்லைக் கூடுதல் விலைக்கு வாங்குகின்ருர்கள். கூட்டுறவுச் சங்கக்கடைகளிலும், அரசாங்கப்பண்ணையிலும் எக்ஸ்4' என்னும் நாலுமாத விதை நெல்லையே பெறக்கூடியதாகவுள்ளது,

(கு. வி. ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வரி விளம்பரம்

### விற்பனைக்கு

தோட்டம்:

பூநகரிப் பகுதியில் வெட்டுக்காடு என்னுமிடத்தில் முன்பு ஹோமர் வன்னிய சிங்கத்திற்கு சொந்தமானதும் பிளாக்கருடைய தோட்டத்திற்கு அடுத்ததுமான 100 ஏக்கர் இளம் தென்னந்தோட்டம் விற்பனைக்குண்டு. சபாரத்தினம், 32, றக்கா ஒழுங்கை, சுண்டிக்குளியைத் தொடர்பு கொள்ளவும். தொலைபேசி 7164.
2349

கருகிய ரோஜா (குறு நாவல்) 2-ம் பதிப்பு விற்பனையாகின்றது புதுமைலோலன் எழுதியது, விலை சதம் 50. 60 சதம் தபாற்தலையனுப்பிப் பெறலாம். வியாபாரிகளுக்கு 25 வீதம் கழிவு தரப்படும். விற்பனை: அன்பு புத்தக சாலை, 27 டி, பெரியகடை, யாழ்ப்பாணம். 2338

## இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்

### திங்கள் 19—10—70

(செய்திகள்: காலை 6-45, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00)

344 மீ. அன்ட் 61 மீ.

காலை 6-15 நாதாஞ்சலி, 6-25 சைவ நற்சிந்தனை, 6-30 கத்தோலிக்கநற்சிந்தனை, 6-35 துதிப்பாடல்கள், 7-15 மெல்லிசை, 7-45 திரைகானம், 8-00 நிலையஒலிப்பதிவுகள், 8-15 இஸ்லாமியகீதங்கள்.

344 மீ. அன்ட் 49 மீ.

பகல் 12-00 தொழிலாளர் கேட்டவை, 1-00 சதம்ப இசை.

344 மீ. அன்ட் 61 மீ.

மாலை 4-25 கல்விஒலிபரப்பு, 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-30 நாளையசந்ததி.

இரவு 6-15 வாத்தியஇசை, 6-30 விவசாயநிகழ்ச்சி, 7-00 திரைகானம், 7-15 வயலின், 7-45 ஐ நா. சித்திரம், 8-00 முஸ்லிம் நிகழ்ச்சி, 9-30 பேச்சு, 9-40 பாட்டு, 10-30 செய்தித்தொகுப்பு.

## கேள்வி விளம்பரம்

### பனங்காமம் கிராமச் சபை

கீழ்க்கொடுக்கப்படும் வேலைகள் செய்வதற்கு ரூபா 5000/-க்கு மேல் பதிவுள்ள ஒப்பந்தகாரர்களிடமிருந்து 1970 ஆண்டு ஐப்பசி மாதம் 27-ந் திகதி காலை 10 மணிக்கு முன் வரைக்கும் அத்தாட்சிப் படுத்தப்பட்ட ஒப்பந்தகாரரிடமிருந்து கேள்விப்பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.

ஒவ்வொரு வேலைக்கும் ரூபா 10/- கிராமச் சபைக் கந்தோரில் அலுவலக நேரங்களில் 26-10-70 திகதி நண்பகல் 12-00 மணி வரைக்கும் கேள்விப் பத்திரப் பணம் செலுத்தி உத்தியோகபூர்வமான பத்திரங்கள் பெற்றுக்கொள்ளலாம்.

கேள்விப் பத்திரத்தின் பிரதியொன்று மன்னார் உள்ளூராட்சி உதவி ஆணையாளருக்கு அக்கிராசனருக்கு கிடைக்கும் அதே திகதியில் கிடைக்கக்கூடியதாக இருக்கவேண்டும். மேற்கொண்டு விபரங்கள் யாவும் பனங்காமம் கிராமச்சபைக் கந்தோரிலோ அன்றி மன்னார் உள்ளூராட்சி உதவி ஆணையாளர் கந்தோரிலோ அறிந்து கொள்ளலாம்.

வேலைகளின் விபரம்

(1) நட்டான் கண்டல் வழிக்கு ரோட்டு கல்லுப் போட்டு தார் ஊற்றி வேலை செய்தல்.

(2) மூன்று முறிப்பு அம்மன் கோவிலடி மடம் அமைத்தல்.

ஆ. தம்பையா ஜே. பி.
கி. ச. தலைவர்,
பனங்காமம்,
நட்டான்கண்டல்

கிராம சபை அலுவலகம்,
நட்டான்கண்டல்,
மாங்குளம்,
16-10-70. 2521


REGAL
Jaffna
Daily 4 Shows
Sydney Poitier
in
TO SIR, WITH LOVE



ராணி (யாழ்ப்பாணம்) தினசரி 4 காட்சிகள்
எம்.ஜி.ஆர் — லட்சுமி
ஜெயலலிதா — அசோகன்
நடித்த
மாட்டுக்கார வேலன்


# கொக்குவில் இந்து - சிதம்பரா வெற்றி

யாழ்ப்பாணம், திங்கள்

யாழ்ப்பாண பாடசாலை விளையாட்டுச் சங்கத்தின் அனுசரணையின் கீழ், யாழ். விளையாட்டரங்கில் தற்போது நடைபெற்றுவரும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற போட்டிகளில் கொக்குவில் இந்துக் கல்லூரியும், சிதம்பராக் கல்லூரியும் வெற்றி பெற்றன.

கொக்குவில் இந்துக் கல்லூரிக்கும், சுன்னாகம் ஸ்கந்தவரோதயாக் கல்லூரிக்குமிடையில் நடைபெற்ற ஆட்டத்தில், இடைவேளைக்கு முன்பாக பந்து கூடுதலாக ஆகாயத்திலேயே காணப்பட்டது.

இடைவேளையின் பின் ஆட்டம் தொடங்கி சில நிமிடங்களின் பின், கொக்குவில் கோஷ்டியின் முன்னணி வீரர் சிவநேசன் அடுத்தடுத்து இரு கோல்களைப் போட்டார். இந்தப் போட்டியின் ஆரம்பத்திலிருந்து முடிவடையும் வரை, ஸ்கந்தா கோஷ்டியின் வீரர்கள் கூடுதலாக பின்னணியில் நின்று விளையாடியதினாலேயே கொக்குவில் கோஷ்டியினருக்கு கோல்கள் போடுவதற்கு இலகுவாக இருந்தது. ஆட்டம் முடிவடைவதற்கு பத்து நிமிடங்கள் இருக்கும் போது கொக்குவில் கோஷ்டியினர் 'பெனல்டி' மூலம் மூன்றாவது கோலைப் போட்டனர். இக்கோலை வீரர் புவநேசன் போட்டார்.

ஆட்டமுடிவில் கொக்குவில் இந்து 3 – 0 கோல்களால் வெற்றி பெற்றது.

இப் போட்டிக்கு திரு. ஈ. கே. குமரையா மத்தியஸ்தராகக் கடமையாற்றினார்.

### சிதம்பரா வெற்றி

வல்வெட்டித்துறை சிதம்பராக் கல்லூரிக்கும், யாழ்ப்பாணம் வைத்தீஸ்வர வித்தியாலயத்துக்குமிடையில் நடைபெற்ற மற்றுமொரு போட்டியில் சிதம்பரா வெற்றி பெற்றது.

இப் போட்டியின் ஆரம்பத்தில் வைத்தீஸ்வராக் கோஷ்டி சிறப்பாக விளையாடி இடைவேளைக்கு முன்பாகவே இரு கோல்களைப் போட்டு முன்னணி வகித்தது.

இடைவேளைக்குப்பின் சிதம்பராக் கல்லூரிக் கோஷ்டி மிக வேகமாக விளையாடி அடுத்தடுத்து ஆறு கோல்களைப் போட்டது.

ஆட்டத்தின் முடிவில் சிதம்பராக் கல்லூரி 6 — 2 கோல்களால் வெற்றி பெற்றது.

இப்போட்டிக்கு திரு சிவலிங்கம் மத்தியஸ்தராகக் கடமையாற்றினார்.

(தே. நி)

அகில இலங்கை அரசினர் பாடசாலை

# தமிழர் ஆசிரியர் சங்க பொது நிர்வாகசபை

கொழும்பு, சனி

கொழும்பில் நடந்த அகில இலங்கை அரசினர் பாடசாலை தமிழர் ஆசிரியர் சங்க வருடாந்த மகாநாட்டில் தெரிவுசெய்யப்பட்ட பொது நிர்வாக சபை உறுப்பினர்கள் வருமாறு:

போஷகர்: திரு. ஆ. க. சுப்பிரமணியம் (கொட்டாஞ்சேனை அ. த. பாடசாலை), தலைவர்: திரு. செ. சிவப்பிரகாசம் (வரணி மகாவித்தியாலயம்), உபதலைவர்கள்: திரு. நா. முத்தையா (கதிரேசன் கனிஷ்ட வித்தியாலயம் நாவலப்பிட்டி), திரு தி. நடராசா (நெடுங்கேணி மகாவித்தியாலயம்), திரு மா. கந்தசாமி (கொட்டாஞ்சேனை மத்திய மகா வித்தியாலயம்), திரு. பொ. ... திரு. சு. வடிவேலு (கைலன்ஸ் கல்லூரி அட்டன்), திரு அ. நாகராசா (தெமட்டக்கொடை அ. த. க. வித்தியாலயம்), பொதுப் பொருளாளர்: திரு. க. கா. மகியாபரணம் (இந்து சிரேஷ்ட பாடசாலை கண்டி), உப பொதுப் பொருளாளர்: திரு. வே. சின்னத்துரை (அப்புத்தளை மகா வித்தியாலயம்), திரு. நா. ஐயாத்துரை (ஆவரங்கால் மெ. மி. பாடசாலை), பரீட்சைச்செயலாளர்: திரு. அ. சுப்பிரமணியம் (கோப்பாய் கந்தவேள் தமிழ்ப் பாடசாலை), பிரசாரச் செயலாளர்: திரு. வே ... மகா வித்தியாலயம்)

பொது நிர்வாகசபை

## இன்றைய பலன்

ஐப்பசி மாதம் 2-ம் திகதி
(19-10-70)

மேஷம்- அவசரம் வேண்டாம். ஆயுதபீடைக்கு இடமுண்டு: நில் நிதானி. அமைதி உன் காலடியில்.

ரிஷிபம்- கண்களில் கனல் தெறிக்கும், கருத்தினில் கர்வம் தோன்றும் கொள்கையில் கோணலாலே குன்றிடும் புகழும்தானே.

மிதுனம்- போதுமென்ற மனமும் புண்ணிய விருப்பும் தலைதூக்கும். பொருள் வரவு நல்லதினம்.

கடகம்- இருள் மண்டிக் கிடக்கும். இன்று ஏமாற்றம் தாக்கும். குடும்பத்தில் உடல்நலம் பாதிக்கப்படலாம்

சிம்மம்- அறிஞர்கள் சந்திப்பு இன்று நிகழும். அறவழியில் ஆர்வம் பிறக்கும். ஆக்கப்பணியில் கவனம் செலுத்தவும்.

கன்னி- மேம்பட வாழ்வீர். பிதாவழித் தனமும் கிடைக்கும். நீண்டநாள் ஆசை இன்று பலித்திடும் பாரீர். தரமான நாள்.

துலாம்- மனதில் அமைதி குன்றும்; எதிரிகள் எக்காளமிடுவர். மறைந்த நினைவுகள் மீண்டும் தலைதூக்கும். அமைதியே நன்று.

விருட்சிகம்- இல்லறத்தில் இனிமை தவழும். வெளியிடத்தொடர்புகள் பெருகும். இனசனங்களின் உதவியும் செல்வாக்கும் பெருகும்.

தனுசு- எண்ணியதில் தடைகள் தோன்றும்: ஏமாற்றம் தாக்கும். நண்பர்களைப்பகைத்துக்கொள்ள வேண்டாம்.

மகரம்- நினைத்தது நடக்கும். பந்துசனங்களின் கொண்டாட்டம் உண்டு. பிதாவழிமூலம் எதிர்பாராத பொருள்வரவு கிடைக்கலாம்.

கும்பம்: வியாபாரத்துறையில் துரித முன்னேற்றம் புதுத்துறைகளில் மனம் நாடுதல். சுபதினம்

மீனம்- வணிகத்துறையில் துரித முன்னேற்றம் காணப்படும். நீண்டநாள் கொடுக்கல்வாங்கல்நிவர்த்தியாகும்.

சோதிடக் கலாநிதி
திருமலை க. வேலுப்பிள்ளை

### வதிரி கோஷ்டிக்கு வெற்றி

உடுப்பிட்டி, ஞாயிறு

வதிரி அம்பாள் விளையாட்டுக்கழகத்தினருக்கும் கர...

'ஈழநாடு' ஆதரவில்

# தீபாவளிப் பெருவிழா

'ஈழநாடு' ஆதரவில் தீபாவளித் தினத்தன்று யாழ் கோட்டை மைதானத்தில் நடைபெறவிருக்கும் மாட்டு வண்டிச் சவாரிப் போட்டியில் பங்குபற்ற விரும்புவோர் கீழே கொடுக்கப்பட்டுள்ள விண்ணப்பப் பத்திரத்தை நிரப்பி, 'ஈழநாடு' த. பெ. எண். 49, யாழ்ப்பாணம் என்ற விலாசத்துக்கோ திரு. எம். பூபாலசிங்கம் ஜே. பி, 'ஸ்டீல் சன்ஸ்' ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம் என்ற விலாசத்துக்கோ அனுப்பலாம். அல்லது நேரிலும் கொண்டு வந்து கொடுக்கலாம். தபால் உறையின் இடது பக்க மேல் மூலையில் 'சவாரிப்போட்டி' என்று குறிப்பிடவேண்டும். 28-10-70 நண்பகல் வரை விண்ணப்பங்கள் அனுப்பலாம்

தீபாவளிக் கலைவிழா, மற்றும் பரிசுப் போட்டிகள் பற்றிய விபரங்களை அறிவதற்குத் தொடர்ந்து 'ஈழநாடு' படியுங்கள்.

இப்போட்டியில் பங்குபற்றக் கூடிய தகுதியை நான் அத்தாட்சிப் படுத்துவதுடன், இப்போட்டியில் பங்கு பற்றுவதனால் எனக்கோ எனது உடைமைக்கோ ஏற்படும் காயம் அல்லது சேதங்களுக்கு நானே பொறுப்பாளி என்பதையும் ஏற்றுக்கொள்ளுகிறேன். எனக்கேற்படக் கூடிய காயம் அல்லது நஷ்டத்துக்கு போட்டிநிர்வாகிகளிடமிருந்தோ அல்லது அவர்களின் பிரதிநிதிகளிடமிருந்தோ அல்லது நியமிக்கப்பட்ட எந்த அதிகாரிகளிடமிருந்தோ எந்தவித நஷ்டஈடும் கோரமாட்டேன் என்றும் உறுதிப்படுத்துகின்றேன்.

போட்டியாளரின் பெயர் ..................................................

பங்குபற்றும் பிரிவு —..................—..................

விலாசம் ..................................................

வயது ..................................................

மேற்கூறிய தகவல்கள் சரியானவை என உறுதிப்படுத்துகின்றேன்,

.................. ..................................
திகதி போட்டியாளரின் கையொப்பம்

### மாணவர் கோஷ்டி வெற்றி

மாவிட்டபுரம், ஞாயிறு

காங்கேசன்துறை கல்வி நிலைய உயர்வகுப்பு மாணவர்களுக்கும் காங்கேசன்துறை யுனைட்டெட் விளையாட்டுக் கழகத்தினருக்குமிடையே நடைபெற்ற உதைபந்தாட்டப் போட்டியில் மாணவர் கோஷ்டி 5-0 கோல்களால் வெற்றிபெற்றது. இப்போட்டிக்கு திரு. பத்மநாதன் மத்தியஸ்தம் வகித்தார்.

— —

### இன்று

யாழ்ப்பாணம், திங்கள்

இன்று மாலை யாழ். நகர சபை மண்டபத்தில் இசைவாணி சரஸ்வதி பாக்கியராஜாவின் வெள்ளிவிழா நடைபெறவிருக்கிறது: யாழ்ப்பாணம் கலாசேவை மன்றம் இவ்விழாவை அவருக்கு எடுக்கிறது, யாழ். நகரமேயர் வடமாநிலக் கல்வி அதிபதி ஆகியோர் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்கின்றனர்.

0 0 0

கொழும்பு, திங்கள்

அகில இலங்கை இந்து கலாச்சார நிலையத்தின் புதிய கட்டடத்திற்கான ...

### வெற்றி தோல்வி இல்லை

சுழிபுரம், ஞாயிறு

சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி உதைபந்தாட்டக் கோஷ்டிக்கும், அளவெட்டி அருணோதயாக் கல்லூரி உதைபந்தாட்டக் கோஷ்டிக்குமிடையே சிநேகபூர்வமாக நடைபெற்ற போட்டியில் ஆட்டம் வெற்றி தோல்வியின்றி முடிவடைந்தது. சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி விளையாட்டு மைதானத்தில் நடைபெற்ற இப்போட்டிக்கு திரு. எஸ் சோமஸ்கந்தன் மத்தியஸ்தம் வகித்தார்.

— —

தெல்லிப்பழையில்

### கம்யூ. கட்சி அரசியல் மகாநாடு

மாவிட்டபுரம், ஞாயிறு

கம்யூனிஸ்ட்கட்சி முற்போக்கு வாலிபர் சங்க சம்மேளன யாழ். பிரதேச அரசியல் மகாநாடு இம்மாதம் 22-ம் திகதி காலை தெல்லிப்பழை யூனியன் கல்லூரியில் நடைபெறவிருக்கிறது.

அன்றுகாலை 9 மணிக்கு கம்யூனிஸ்ட் பிரமுகர் திரு. ...



### பரிசு பெற்றவர்

யாழ்ப்பாணம் கிறிஸ்தவ வாலிபர் சங்கத்தினால் நடத்தப்பட்ட மேல்நாட்டு சங்கீதப் போட்டியில் 16 வயதுக்குட்பட்டவர்கள் பிரிவில் 1970-ம் ஆண்டு பியானோ அக்கோடியன் வாசிப்பதில் முதலிடம் பெற்ற செல்வன் ப. மோகன் ...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ராணி (யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
எம்.ஜி.ஆர் — லட்சுமி
ஜெயலலிதா — அசோகன்
நடித்த
மாட்டுக்கார வேலன்

யாழ். வின்ஸர் தியேட்டரில்
தினசரி 4 காட்சிகள்
ஜெமினிகணேசன் — காஞ்சனா
நடித்த
சாந்தி நிலையம்

7-வது வாரம்
வெலிங்டன் யாழ்நகர்
(2-30, 6-30, 9-30) போயாதினங்களில் 4 காட்சிகள்

தாய்க்குலத்தின் பெருமைக்கும் தமிழகத்தின்
மாண்புக்கும் உதாரணமாய் வாழ்ந்த விஜயாவின்
உள்ளத்தை உருக்கும் கண்ணீர் காவியம்.
உணர்ச்சி ஓவியம் . . .
★ ஏ.வி.எம்.ராஜன்
இந்திய ஜனாதிபதியின் 'ஊர்வசி' பரிசுபெற்ற ★ சாரதா
காஞ்சனா, முத்துராமன், ரி. எஸ். பாலையா,
நாகேஷ், சுந்தரராஜன், பேபி ரோஜாரமணி
நடித்த
ஸ்ரீ விநாயகா சுப்ரீயா கம்பைன்ஸ்
துலாபாரம்
(தமிழ்)
டைரக்ஷன்: வின்ஸன்ட்
(1969-ம் ஆண்டின் சிறந்த இயக்குனர்)

கெப்பிட்டல் (கொழும்பு)
பிளாஸா (வெள்ளவத்தை)
வெகு விரைவில் வெலிங்டன் யாழ்ப்பாணம்
★ சிவாஜி ★ சௌகார் ஜானகி
சிவகுமார், வாணிஸ்ரீ, பாரதி
மற்றும் பலர் நடித்த
ஏ. வி. எம். புரடக்ஷன்ஸ்
உயர்ந்த மனிதன்
[1968-ம் ஆண்டின் சிறந்த படத்திற்குரிய பாராட்டைப் பெற்றது]


திரு. நா. முத்தையா (கதிரேசன் கனிஷ்ட வித்தியாலயம் நாவலப்பிட்டி), திரு தி. நடராசா (நெடுங்கேணி மகாவித்தியாலயம்), திரு மா. கந்தசாமி (கொட்டாஞ்சேனை மத்திய மகா வித்தியாலயம்), திரு. பொ சிவகுரு (சென். மேரிஸ் த. ம. வி. பண்டாரவளை) பொதுச் செயலாளர்: திரு. ந. பாலசுப்பிரமணியம் (கொட்டாஞ்சேனை அ. த. பாடசாலை), உபபொதுச்செயலாளர்கள்.


வெஸ்லிசினிமா
மானிப்பாய்
தினசரி 6-30, 9-30
போயா, பிரீபோயா 2-30
சிவாஜி-சரோஜாதேவி
நடித்த
பாலும் பழமும்

ராஜா (யாழ்ப்பாணம்)
தினசரி 3 காட்சிகள்
போயா நாட்களில் 4 காட்சிகள்
சிவாஜி-பானுமதி
நடித்த
அறிவாளி

ஸ்ரீகாலிங்கன்
இணுவில்
தினசரி 2-30, 6-30, 9-30
சிவாஜி-சௌகார் ஜானகி
நடித்த
படிக்காத மேதை

MANOHARA
Jaffna
Daily 4-45, 7 & 9-45 p.m
Guiliano Gemma
in
FORT YUMA GOLD
(Scope-color)


[illegible] திரு. அ. சுப்பிரமணியம் (கோப்பாய் கந்தவேள் தமிழ்ப் பாடசாலை). பிரசாரச் செயலாளர்: திரு. வே குலசேகரம் (நயினாதீவு மகா வித்தியாலயம்)

## பொது நிர்வாகசபை உறுப்பினர்

திரு க சுப்பிரமணியம் (செயலாளர் வலி வடக்குக் கிளை, சேர் கனகசபை வித்தியாசாலை தெல்லிப்பழை), திரு வ மகாலிங்கம் (தலைவர் வலி மேற்குக்கிளை, இந்துக்கல்லூரிபண்டத்தரிப்பு), திரு சி சி கணபதிப்பிள்ளை (செயலாளர் வடமராட்சிக் கிளை, உடுத்துறை மகா வித்தியாலயம் செம்பியன்பற்று) திரு மு கதிரேசு (செயலாளர் தென்மராட்சிக் கிளை, மீசாலை வீரசிங்கம் வித்தியாலயம்), திரு சு சங்கரப்பிள்ளை (செயலாளர் இரத்தினபுரிக் கிளை, அ த க பாடசாலை இரத்தினபுரி), திரு க சச்சிதானந்தசிவம் (செயலாளர் முல்லைத்தீவுக் கிளை, ஒட்டுசுட்டான் இந்துதமிழ்ப் பாடசாலை), திரு த துரைச்சாமி (செயலாளர்கிளிநொச்சிக்கிளை, பளை மகா வித்தியாலயம்). திரு ஏ பி வி கோமஸ் (செயலாளர் கேகாலைக் கிளை, சாகிரா ம வி மாவனல்ல), திரு நா நடராசா (செயலாளர் தீவகக் கிளை. புங்குடுதீவு மேற்கு அ மி த க பாடசாலை), திரு சி சண்முகநாதன் (செயலாளர் கற்றன்கிளை, சென் ஜோன் பொஸ்கோஸ் கல்லூரி கற்றன்), திரு மு இராஜநாயகம் (செயலாளர் சிலாபக் கிளை, முனீஸ்வரம் அ த க பாடசாலை). திரு நா நடராசா (செயலாளர் பண்டாரவளைக் கிளை. பண்டாரவளை சென் மேரிஸ் மகா வித்தியாலயம்). திரு பொ நாகராசா (செயலாளர் பதுளைக் கிளை, பதுளை தமிழ் மகளிர் வித்தியாலயம்). திரு வீ கனகசபாபதி (செயலாளர் கண்டிக்கிளை, கெங்கெல்லை அ த க பாடசாலை), திரு ஐ துரைராஜசிங்கம் (செயலாளர் திருக்கோணமலைக் கிளை, ஆத்திமோட்டை அ த க பாடசாலை சாம்பல்தீவு) திரு வே சிவராசா (செயலாளர்கொழும்புக்கிளை, தெமட்டகொடை அ த க பாடசாலை), திரு மு நடராசா (செயலாளர் வவனியாக் கிளை கோளியகுளம். அ த க பாடசாலை ஓமந்தை), திரு வீ குணரத்தினம் (செயலாளர் நாவலப்பிட்டிக்கிளை, கதிரேசன் கல்லூரி நாவலப்பிட்டி), திரு க மழவராயர் (தலைவர் அனுராதபுரக்கிளை, மிகிந்தலை ஞே. க. பாடசாலை). திரு பொ ஏரம்பு (செயலாளர் யாழ். கிளை, கொழும்புத்துறை இந்து மகாவித்தியாலயம்), திரு பி லோகநாதன் (செயலாளர் மாத்தளைக் கிளை, பலாபத்வலை அ த க பாடசாலை), திரு ஜே எம் பி ஜெயராசா (செயலாளர் நுவரேலியாக் கிளை. சிங்கள தமிழ்க்கலவன் பாடசாலை நானுஓயா), திரு க பசுபதி (செயலாளர் மன்னார்க்கிளை, உயிலங்குளம் வண்ணமோட்டை அ த க பாடசாலை).

## வதிரி கோஷ்டிக்கு வெற்றி

உடுப்பிட்டி, ஞாயிறு

வதிரி அம்பாள் விளையாட்டுக்கழகத்தினருக்கும் கரவெட்டி விக்னேஸ்வராக் கல்லூரி விளையாட்டு வீரர்களுக்குமிடையே நடைபெற்ற சிநேகபூர்வமான உதைபந்தாட்ட மோதலில் வதிரி அம்பாள் கோஷ்டியினர் 5—0 கோல்களால் வெற்றியீட்டினர்.

திரு. தர்மராசா மத்தியஸ்தராகக் கடமையாற்றினார்.

[illegible] கலந்து கொள்கின்றனர்.

0 0 0

கொழும்பு, திங்கள்

அகில இலங்கை இந்து கலாச்சார நிலையத்தின் புதிய கட்டடத்திற்கான அடிக்கல் நாட்டும்வைபவம் இன்று கொழும்பு சேர். சிற்றம்பலம் காடினர் மாவத்தையில் நடைபெறுகிறது.

## 250 ரூபா அபராதம்

முல்லைத்தீவு, ஞாயிறு

முல்லைத்தீவு பஜார் வீதியைச்சேர்ந்த எஸ். எம். அப்துல் கசன் என்பவர் உணப்பிலவு வாசியான சின்னையா ஐயாத்துரையின் காணாமற்போன 5 கூப்பன்களைச் சட்டவிரோதமாக வைத்திருந்தாரென முல்லைத்தீவு உணவு விலைக்கட்டுப்பாட்டுப் பரிசோதகர் திரு. வி. முதலித்தம்பியினால் தொடரப்பட்டவழக்கு முல்லைத்தீவு நீதிபதி திரு. எம். பீ ஜி. திசநாயக்கா முன்னிலையில் விசாரணைக்கு எடுக்கப்பட்டது. அப்போது எதிரி தனது குற்றத்தை ஒப்புக் கொண்டார்.

நீதிபதி எதிரிக்கு ரூபா 250 அபராதம் விதித்தார் அபராதம் செலுத்தாவிடில் 6 கிழமை சிறைசெல்ல வேண்டும் எனவும் உத்தரவிட்டுத் தீர்ப்பளித்தார்.

## தீபாவளி முற்பணம் பெறுவர்

எழுதுமட்டுவாள், ஞாயிறு

கைதடி ஆயுர்வேத வைத்தியசாலைக் கட்டிடத்தொழிலாளரின் கோரிக்கைக்கிணங்க வழக்கமான அவர்களது சம்பள முற்பணத்துடன் விசேஷமாக 100 ரூபா தீபாவளியை முன்னிட்டு வழங்கப்படவிருக்கிறது. இப்பணம் மாதாந்தம் சிறுசிறு தொகையாக அவர்களது சம்பளத்திலிருந்து கழிக்கப்படுமெனத் தெரிகிறது.

[illegible] மேளன யாழ். பிரதேச அரசியல் மகாநாடு இம்மாதம் 22-ம் திகதி காலை தெல்லிப்பழை யூனியன் கல்லூரியில் நடைபெறவிருக்கிறது.

அன்றுகாலை 9 மணிக்கு கம்யூனிஸ்ட் பிரமுகர் திரு. அ வைத்திலிங்கம் கட்சிக் கொடியேற்றி வைப்பதையடுத்து உரும்பராய்ப்பட்டின சபைத்தலைவரும் கம்யூனிஸ்ட் வட பிரதேச வாலிப முன்னணித்தலைவருமான திரு. கே. தவஞானம் தலைமையில் அரசியல் மகாநாடு ஆரம்பமாகும்.

இம்மகாநாட்டில் உதவிக் கல்விமந்திரி திரு. பி. வை துடாவை, கம்யூனிஸ்ட்கட்சி அமைப்பாளர் திரு. வி. ஏ. சமரவிக்கிரமா, வடபிரதேச கம்யூனிஸ்ட்கட்சிச் செயலாளர் திரு. வி. பொன்னம்பலம், நியமன எம். பி எம் ஸி. சுப்பிரமணியம் உட்படபலர் கலந்துகொண்டு உரையாற்றுவர் பல தீர்மானங்கள் இம்மகாநாட்டில் நிறைவேற்றப்படும். புதுவருட நிர்வாகிகளும் தெரிவு செய்யப்படுவார்கள்.

அரசியல் மகாநாட்டையடுத்து தெல்லிப்பழை சந்தியிலிருந்து ஊர்வலம் ஆரம்பமாகி மல்லாகம் நீதிமன்றத்துக்கு அருகில் அமைந்த கூட்டமைதானத்தை அடைந்தபின் கூட்டம் நடைபெறும்

## வெள்ளம் வடிகிறது

கோட்டை ஞாயிறு

கொழும்பில்வெள்ளம்வடியத்தொடங்கியிருக்கிறது ஆயினும் வெள்ளத்தினால் ஏற்பட்ட சேதங்கள் பல இடங்களிலும் இன்னும் போக்குவரத்துச் சேவையைச் சீர்குலைத்திருக்கிறது

கொழும்பு - அவிசாவளை வீதி இன்னும் போக்குவரத்துக்குச்சீராகவில்லைகினிகத்தனை - அட்டன் வீதியில் சில தினங்களுக்கு முன்னர் மண்சரிவு ஏற்பட்ட இடத்தில் போக்குவரத்தைச் சீராக்கும் வேலைகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

[illegible] சங்கீதப் போட்டியில் 16 வயதுக்குட்பட்டவர்கள் பிரிவில் 1970-ம ஆண்டு பியானோ அக்கோடியன் வாசிப்பதில் முதலிடம் பெற்றசெல்வன் ப. மோகன் இங்கு வாத்தியத்துடன் காணப்படுகிறார். தெல்லிப்பழை மகாஜனக்கல்லூரியில் இவர் இப்பொழுது பயின்று வருகின்றார்.

## இலங்கையில் ஐ. நா. விழா

கோட்டை. ஞாயிறு

ஐ. நா. ஸ்தாபனத்தின் 25 வருடவெள்ளிவிழா இலங்கையிலும் சிறப்பாகக் கொண்டாடப்படவிருக்கிறது.

இம் மாதம் 24-ந் திகதி மாலை 'நவரங்ககல' மண்டபத்தில் கவர்னர் ஜெனரல் வில்லியம் கோபல்லவா, திருமதி கோபல்லவா பிரதமர் திருமதி சிறிமா பண்டாரநாயகா ஆகியோர் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்ளும் ஐ. நா. தின நிகழ்ச்சிகள் நடைபெறும் இவ்வைபவத்தில் பிரதமர் திருமதி சிறிமாவும் ஐ. நா. இலங்கைச் சங்கத்தின் தலைவரான உள்ளூராட்சி உள்நாட்டு அமைச்சர் திரு. பீலிக்ஸ் ஆர். டயஸ் பண்டாரநாயகாவும் உரை நிகழ்த்துவர் நாட்டிய நாடகம் மற்றும் கலை இசை நிகழ்ச்சிகளும்இடம்பெறும்.

## ஊழியர் கஷ்டம்

முல்லைத்தீவு, ஞாயிறு

முல்லைத்தீவு காரியாதிகாரி அலுவலகம் பிஸ்கால் அலுவலகம் ஆகியவற்றில் உத்தியோகஸ்தர் ஊழியர் யாவரும் மழை நேரங்களில் பெரும் அல்லற்படுகின்றனர். காரணம் மேற்படி அலுவலகத்தின் பல ஓடுகள் உடைந்து கவனிப்பாரற்றுக் கிடப்பதால் மழை நேரங்களில் தண்ணீர் பெருமளவில் உட்செல்கிறது இதனால் ஊழியர் கஷ்டமடைகின்றனர்.


தீபாவளி மலிவு விற்பனை!
புதிதாக வரவழைக்கப்பட்ட மெசின் வேலைப்பாடு போட்ட
சிவ்ற் (Shift) துணிகள் பிளேயின் நைலக்ஸ் சேலைகள்
12 அழகான நிறங்களில்
உங்களுக்குத் தேவையானவற்றை தெரிவு செய்வதற்கு
இன்றே விஜயம் செய்யுங்கள்
டயரும்ஸ்
54, 60, மெயின்வீதி யாழ்ப்பாணம்.

உத்தரவாதமுள்ள தங்க - வைர
நகைகளைப் பெற்றுக் கொள்ள
நம்பிக்கை வாய்ந்த ஸ்தாபனம்
எஸ். எல். எம். தீபி அன் சன்ஸ்
நகைகள் — வைர வியாபாரிகள்
கன்றுபிட்டி (R. G. பில்டிங்) யாழ்ப்பாணம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முல்லைத்தீவு பஸ் கண்டக்டர் கொலைவழக்கு

# 5 ஆயிரம் ரூபா பிணையில் எதிரிகள் செல்ல அனுமதி

முல்லைத்தீவு ஞாயிறு
முல்லைத்தீவு பஸ் கண்டக்டர் கொலை வழக்கில் எதிரிகள் இருவரையும் பிணையில் செல்ல நீதிபதி அனுமதித்தார். பொலிஸாரின் கோரிக்கையை ஏற்கமறுத்த நீதிபதி அவர்களைத் தலா ஐயாயிரம் ரூபா பிணையில் செல்ல அனுமதியளித்தார்.

முல்லைத்தீவுப் பகுதியில் பரபரப்பை ஏற்படுத்திய முல்லைத்தீவு பஸ் கண்டக்டர் துரைராசாவின் கொலை வழக்கு விசாரணை மீண்டும் முல்லைத்தீவு நீதிபதி திரு எம். பி. ஜி. திசநாயக்கா முன்னிலையில் விசாரணைக்கு நேற்று முன்தினம் எடுக்கப்பட்டது,

இவ்வழக்கில் குமுளமுனையில் வைத்து இவ்வருடம் ஆனிமாதம் 8-ம் திகதி முல்லைத்தீவு இ. போ. ச பஸ் கண்டக்டராகக்கடமை செய்த துரைராசா என்பவரைக் கொலை செய்ததாக குமுளமுனையைச் சேர்ந்த மயில்வாகனம், தியாகராசா, வேலுப்பிள்ளை இரத்தினசிங்கம் ஆகியோர் மீது முல்லைத்தீவுப் பொலிசாரால் குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

எதிரிகள் சார்பில் திரு ஜி. ஜி. பொன்னம்பலம் கியூ. ஸி. அட்வகேட் திரு. அரசுவால்டனின் உதவியுடனும் புரக்டர் திரு சிவா. சிறீதரனின் அனுசரணையுடனும் ஆஜரானுர்.

பொலிஸ்தரப்பில்வவனியா பொலிஸ் இன்ஸ்பெக்டர் திரு. டயஸ் வழக்கை நடத்தினுர்.

விசாரணையில் கரிக்கட்டுமூலை மேற்கு அளம்பில் கிராமசபைத்தலைவர் நல்லதம்பி, குமாரசுவாமி குமுளமுனையைச் சேர்ந்த மயில்வாகனம் நவரத்தினம் கதிரித்தம்பி கனகலிங்கம் கிருஷ்ணபிள்ளை பெண் அன்னப்பிள்ளை முல்லைத்தீவு இ. போ. ச. டிப்போமனேஜர் எஸ். சொக்கலிங்கம் ஆகியோர் சாட்சியமளித்தனர்.

எதிரிகளின் சிரேஷ்ட வழக்கறிஞர் திரு ஜி. ஜி. பொன்னம்பலம் இதுவரை அளித்த சாட்சியங்களையும் வைத்திய அறிக்கையையும் கவனத்தில் கொண்டு எதிரிகளை பிணையில் செல்ல அனுமதிக்குமாறு நீதிபதியைக கேட்டார் பொலிஸ் இன்ஸ்பெக்டர் திரு. டயஸ் பிணையில் விடுவதை ஆட்சேபித்தார்.

நீதிபதி திரு பொன்னம்பலத்தின் வேண்டுகோளை ஏற்று எதிரிகளை தலா ரூபா 5000 பிணையில் செல்ல அனுமதித்தார்

நீதிபதி எதிரிகளை நோக்கி 'உங்கள் வழக்கறிஞரின் வேண்டுகோளின் படியும், இதுவரை அறிவிக்கப்பட்ட சாட்சியங்களையும் கவனத்தில் கொண்டு உங்களைப் பிணையில் செல்ல அனுமதிக்கிறேன். ஆனுல் நீங்கள் 15 நாட்களுக்கு ஒரு தடவை முல்லைத்தீவுப் பொலிஸ் நிலையத்தில் சென்று கையொப்பமிட வேண்டும்' என எதிரிகளை நோக்கி நீதிபதி தெரிவித்தார்

மேல் விசாரணை இம்மாதம் 30 திகதிக்கு ஒத்தி வைக்கப்பட்டது.

# லிபியா அரசைக் கவிழ்க்க முயன்ற 5 பேருக்கு மரணதண்டனை

## இருவர் முன்னுள் மந்திரிகள்

### யேமனிலும் ஐவருக்கு தூக்கு

பெங்காஸி, அக். 18
அரசாங்கத்தைக் கவிழ்க்கச் சதி செய்தார்கள்என்ற குற்றச்சாட்டின் பேரில் லிபியாவில் இரு முன்னுள் மந்திரிகள் உட்பட ஐவருக்கு மரணதண்டனை விதிக்கப்பட்டுள்ளது ராணுவநீதிமன்றம் இந்தத் தீர்ப்பை வழங்கியது. இவர்கள் சுட்டுக் கொல்லப்படுவார்கள்.

லிபியாவின் சட்ட ரீதியான ஆட்சியைக்கவிழ்க்கவும், நாட்டில் குழப்பத்தை ஏற்படுத்தவும் முயன்ருர்கள் என்று இவர்கள்மீது அரசாங்கம் குற்றம்சுமத்தியது

முன்னர் பாதுகாப்பு மந்திரி, உள்துறை மந்திரி ஆகிய இவ்விருவருக்கும் இதே குற்றச்சாட்டின் பேரில் ஆயுள்தண்டனை விதிக்கப்பட்டிருந்தது. இதனை மக்கள் எதிர்த்து அவர்களைத் தூக்கிலிட வேண்டுமென்று கிளர்ச்சி செய்தனர். இதனுல் திரும்பவும் இராணுவ நீதிமன்றத்தில் விசாரணை நடைபெற்றது. விசாரணையின்பின்பே இவ்விரு மந்திரிகள் உட்பட 5 பேருக்கு நேற்று மரண தண்டனை விதிக்கப்பட்டது.

இக்குற்றச்சாட்டுகள் மீது மேலும் நாலு பேருக்கு ஆயுள் தண்டனையும் 18 பேருக்கு நாலாண்டிலிருந்து 15 ஆண்டுகள் வரையில் கடும்சிறைத் தண்டனையும் விதிக்கப்பட்டது.

**யேமனில்**

யேமனில் இதேபோன்று அரசாங்கத்தைக் கவிழ்க்கச் சதி செய்தார்கள், ஆளும் கட்சிப் பிரமுகர்களைக் கடத்த முயன்ருர்கள் என்றும் குற்றம்சாட்டப்பட்ட ஐவருக்கு இன்று மரண தண்டனை விதிக்கப்பட்டது.

**'ஆயுர்வேத டிஸ்பென்சரி நிறுவுக'**

சுழிபுரம். ஞாயிறு
'பொன்னுலை கிருஷ்ணன் கோவிலுக்கு அருகாமையில் ஓர் ஆயுர்வேத வைத்திய நிலையத்தை நிறுவி வாரத்தில் மூன்று தினங்கள் சேவையாற்றச் செய்ய வேண்டும்' எனக் கோரும் மகஜரை சுழிபுரம் கிராம சபைத் தலைவருக்கு கிராம சபை உறுப்பினர் திரு எம். மயில்வாகனம் அனுப்பி வைத்துள்ளார்.

# ஜோர்டானில் மீண்டும் சண்டை ஆரம்பம்

பாக்தாத்.ஒக்.18
ஜோர்டானில் கொமாண்டோக்களுக்கும் அரசாங்கப் படைகளுக்குமிடையில் மீண்டும் கடுமையான சண்டை ஆரம்பித்திருப்பதாக செய்திகள் கிடைத்துள்ளன.

வடஜோர்டானில்ராம்தா நகர்ப் பகுதியில் இந்தச் சண்டை ஆரம்பமாகியுள்ளது

கொமாண்டோ நிலைகள் மீது அரசாங்கப் படைகள் தாங்கிகளைக் கொண்டும் பீரங்கிகளினுலும் மூர்க்கமாகத் தாக்கியதாக கொமாண்டோக்கள் கூறியுள்ளார்கள். இதுசம்பந்தமாக அம்மானில் எதுவிதத் தகவலும் வெளியாகவில்லை

போர் ஒய்வு குறித்து கடைசியாக ஏற்பட்ட ஒப்பந்தத்தையும் அரசாங்கத் துருப்புகள் மீறிவிட்டார்கள் என்று கொரில்லாக்கள் அறிவித்துள்ளனர்.

ஜோர்டானில் அமைதியை மேற்பார்வைசெய்வதற்காக நியமிக்கப்பட்ட அரபுநாடுகளின் குழுவிடம் இது பற்றி புகார் செய்துள்ளனர். இந்தக் குழுவினர் சண்டை நடைபெறும் இடங்களுக்கு வரும் பொழுது அரசாங்கத்தரப்பினர் தாக்குவதை நிறுத்திவிடுவதாகவும் அவர்கள் போனதும் மீண்டும் தாக்க ஆரம்பித்து விடுவதாகவும் கொரில்லாக்கள் புகார் தெரிவித்துள்ளனர்.

# சதாக் ஜனுதிபதியாக சத்தியப் பிரமாணம்

கெய்ரோ, அக் 18
ஐ. அ. குடியரசின் புதிய ஜனுதிபதியாக திரு அன்வார் சதாக் சத்தியப்பிரமாணம் செய்துகொண்டார்.

நேற்று இரவு கெய்ரோவிலுள்ள 360 அங்கத்தவர்களுடைய தேசிய சட்ட சபையின் விசேஷகூட்டத்தில் இவ்வுறுதி மொழியை அவர் எடுத்துக்கொண்டார்.

தேசிய சட்ட சபையால், ஜனுதிபதி பதவிக்குப் பிரேரிக்கப்பட்ட ஒரே ஒருவரான திரு. அன்வார்சதாக் பொது மக்களில் 92 சதமானேரின் வாக்கை சாதகமாகப் பெற்ருர். திரு. சதாக் ஆறு வருடத்திற்கு ஜனுதிபதியாக இருப்பார்.

காலஞ்சென்ற ஜனுதிபதியின் 32 வருடக் கூட்டாளியான இவர் 1952-ம் ஆண்டு நடைபெற்ற மன்னர் பரூக்குக்கு எதிரான புரட்சியில் பங்குகொண்டார் இவர் ஐ. அ. குடியரசின் மூன்ருவது ஜனுதிபதியாவார்.

இவர் பதவி ஏற்றதும், புதிய மந்திரி சபை அமைக்கும்வரை காலஞ் சென்ற ஜனுதிபதி நாசரின் மந்திரி சபையில் இருந்தவர்களைத் தொடர்ந்து இருக்குமாறு கோரியுள்ளார்.

ஐ. அ. குடியரசிற்கு லிபியா தன் ஆதரவைத் தெரிவித்துள்ளது. திரு. அன்வார் சதாக் ஜனுதிபதியாகத் தெரிவுசெய்யப்பட்டமைக்கு உலகத் தலைவர்கள் அவரைப் பாராட்டி செய்திகள் அனுப்பிவைத்துள்ளனர்.

சோவியத்விமானத்தை திசை திருப்பியவர்கள்

# கொலைக்குற்றம் வாபஸ்: தொடர்ந்து காவல்

மாஸ்கோ, அக். 18
சோவியத் விமானமொன்றை துருக்கிக்கு திசை திருப்பி அங்கு கொலைக் குற்றம் சாட்டப்பட்டு விசாரணை செய்யப்பட்ட இருவரும் நீதிமன்றத்தால் விடுதலை செய்யப்பட்டனர். திசை திருப்பப் பட்ட விமானத்தில் திட்டமிட்டுக் கொலை செய்யப்படவில்லை என்றும், தற்செயலாக இடையில் நடந்த சம்பவத்திலேயே கொலை நடைபெற்றதென்றும் நீதி மன்றம் கருதியதினுலேயே இவர்கள் விடுதலை செய்யப்பட்டனர்.

என்ருலும் தந்தையும் மகனுமான அவ்விருவரும் தொடர்ந்தும் காவலில் வைக்கப் பட்டுள்ளனர்.

திசை திருப்பப்பட்ட சோவியத் விமானப் பிரயாணிகள் 45 பேரும் துருக்கியிலிருந்து சோவியத் யூனியனுக்குத் திருப்பி அனுப்பி வைக்கப்பட்டனர்.

சோவியத் உள்நாட்டு விமானச் சேவையில் ஈடுபட்டிருந்த விமானமொன்றை 45 பிரயாணிகளுடன் சோவியத் பிரஜைகள் இருவர் துப்பாக்கி முனையில் திசை திருப்பி துருக்கிக்குக் கொண்டு சென்றனா. இந்த விமானப் பிரயாணிகள் 45 பேரையும் விமான திசை திருப்பலில் கொலையுண்ட விமானப் பணிப்பெண்ணின் உடலையும் நேற்றுமுன்தினம் சோவியத் யூனியனுக்கு துருக்கி அரசாங்கம் அனுப்பி வைத்தது.

# பொலிஸ் பட்டியில் மாற்றம்

கொழும்பு. ஞாயிறு
பொலிசாரின் தரத்திற்கேற்ப அளிக்கும் பட்டிகளில் புதிய மாற்றம் செய்வதற்கு பாதுகாப்பு வெளிவிவகார அமைச்சு பொலிஸ் இன்ஸ்பெக்டர் ஜெனரலுக்கு அதிகரம் அளித்துள்ளது.

இதன் பிரகாரம் பொலிஸ் இன்ஸ்பெக்டர் தொடக்கம் பொலிஸ் சுப்பிரிண்டன் வரையில் அவர்களது தரத்துக்குரிய பட்டிகளில் மாற்றம் செய்யப்படுகின்றது.

பின்வருமாறு அவர்களது தரப்பட்டி அமைந்திருக்கும்.

இன்ஸ்பெக்டர் - இரண்டு நட்சத்திரம் தலைமை இன்ஸ்பெக்டர் - இரண்டு நட்சத்திரம் - 1 பட்டி பயிற்சிக்கால ஏ. எஸ். பி. மூன்று நட்சத்திரம் ஏ. எஸ். பி. - அரசுமுடி ஏ. எஸ். பி. இரண்டாம் தரம்:- முடியும் ஒரு நட்சத்திரமும் ஏ. எஸ். பி. முதலாம்தரம்:- முடியும் இருநட்சத்திரங்களும்

'கைத்தொழில் ஆசிரியரும்

# 'கூட்டுறவு மூலமே பொருளாதாரத்தை வளர்க்கலாம்'

— அரசாங்க அதிபர்

பருத்தித்துறை, ஞாயிறு
'நாட்டின் பல்வேறு பிரச்னைகளுக்கும் ஓரளவாவது தீர்வுகாண வேண்டுமாயின் உணவுற்பத்தியை அதிகரிப்பதுடன் கூட்டுறவு முறை மூலம் உணவுப் பொருட்களை நியாயமான முறையில் விநியோகிக்கவும் வேண்டியது அவசியம். விவசாயிகள் கூட்டுறவு முறை மூலமே தங்கள் பொருளாதாரத்தை வளர்க்க முடியுமென்பதற்கு இன்று பல நாடுகள் உதாரணமாக விளங்குகின்றன. ஆனுல் கூட்டுறவு முறையில் நேர்மை நிலவ வேண்டியது

தலைமை தாங்கிய வடமாகாண அரசாங்க அதிபர் திரு ஜே எம். அபயவிக்கிரம கூறினுர்.

திரு. அபயவிக்கிரம தொடர்ந்து பேசுகையில் இன்றைய அரசாங்கம் வழங்கவிருக்கும் பல வித நன்மைகளையும் விவசாயிகள் பெறவேண்டுமென்றும், அவற்றில் தவருன முறையில் நடந்து கொள்வோர் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படுமென்றும் கூறினுர்.

வடமராட்சிக் காரியாதிகாரி திரு எஸ். ஜெயகாந்தன் விவசாயச் சேவை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முறை மூலமே தங்கள் பொருளாதாரத்தை வளர்க்க முடியுமென்பதற்கு இன்று பல நாடுகள் உதாரணமாக விளங்குகின்றன. ஆனுல் கூட்டுறவு முறையில் நேர்மை நிலவ வேண்டியது அவசியம்'

இவ்வாறு நேற்று முன்தினம் வதிரி, வடமராட்சி ஆங்கிலப் பாடசாலையில் நடைபெற்ற, வடமராட்சி உணவுற்பத்தியாளர் சம்மேளனக் கூட்டத்திற்குத் ...யில் நடந்து கொள்வோர் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படுமென்றும் கூறினுர்.

வடமராட்சிக் காரியாதிகாரி திரு எஸ். ஜெயகாந்தன் விவசாயச் சேவை உதவியாணையாளர் திரு. எஸ். சபாரத்தினம், மாவட்ட அதிகாரி திரு எம். மாணிக்கவாசகர் ஆகியோரும் கூட்டத்திற் கலந்து உரை நிகழ்த்தினர்.

## 'அன்பும் பொறுமையும் இளைஞருக்கு அவசியம்'

பருத்தித்துறை, ஞாயிறு

''கிறீஸ்துவ உலகின் எதிர்காலம் இன்றைய இளைஞரின் கையில் உள்ளது எதிர்காலம் இருள் சூழ்ந்ததாகவும் பல இன்னல்கள் நிறைந்ததாகவும் காணப்படுகிறது இவற்றைச் சமாளித்து வெற்றி காண வேண்டுமாயின் இளைஞரிடம் சகிப்புத்தன்மையும் பொறுமையும் இருக்க வேண்டியது அவசியம்''

இவ்வாறு யாழ். மேற்றிராசனத்தைச்சேர்ந்த வண. பிதா ஜீ. ரி. பாலசுந்தரம் நேற்று முன்தினம் நடந்த நெல்லியடி மத்திய மகாவித்தியாலய கிறீஸ்துமறைமாணவர் மன்ற ஆண்டு விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்து உரையாற்றிய போது கூறினுர்.

திரு. பீ. ஜீவநாதன் தலைமையில் நடந்த இவ்விழாவில் அவர் மேலும கூறியதாவது: மதங்களிடையே போட்டியும் பூசலும் நிலவிய காலம் மறைந்து விட்டது. இன்று சகல மதங்களும் சகவாழ்வு வாழ வேண்டுமென்ற முற்போக்கு எண்ணம் உலகெங்கும் உதித்துள்ளது. இவ்வித சூழல்களிடையே தான் மத வளர்ச்சியைநாம் காணமுடியும்.

கல்லூரி அதிபர் திரு. க. சிவசிதம்பரமும் கலந்து கொண்டு உரைநிகழ்த்தினுர்.

## இடைக்கால இடமாற்றம்

மாவிட்டபுரம், ஞாயிறு

பொலிஸ் பகுதியின் இடைக்கால இடமாற்றத் திட்டம் ஒன்றை வடமாகாண பொலிஸ் அதிபர் வகுத்துள்ளார்.

இத்திட்டப்படி இம்மாதம் 15-ம் திகதி முதல் வல்வெட்டித்துறை சங்கானை, காங்கேசன்துறை, பருத்தித்துறை, தலைமன்னுர், கிளிநொச்சி ஆகிய பொலிஸ் நிலையங்களிலிருந்து இடமாற்றம்செய்யப்பட இருக்கின்றனர்.


சார்ஜன்ட் பெரேரா வல்வெட்டித்துறையில் இருந்து சங்கானைக்கும் சார்ஜன்ட் சில்வா சங்கானையில் இருந்து வல்வெட்டித்துறைக்கும் கான்ஸ்டபிள்களான சுப்பிரமணியம் வல்வெட்டித்துறையிலிருந்து காங்கேசன் துறைக்கும் பெரேரா பருத்தித்துறையில் இருந்து தலைமன்னுருக்கும் குக்குபண்டா சங்கானையில் இருந்து பருத்தித்துறைக்கும் ஜயவீரா கிளிநொச்சியில் இருந்து சங்கானைக்கும் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர்

## சேவாச்சிரமத்தின் பணி

உடுப்பிட்டி, ஞாயிறு

''ஸ்ரீ சாரதா நிலைய சேவாச்சிரமத்தின் தலையான பணி, இவ்விளம் பிள்ளைகளின் எதிர்கால வாழ்வைச் செம்மையாக்குவதே. அன்றுட வாழ்வில் தற்பொழுது காணப்படாத நேர்மை, ஒழுக்கம், அன்பு, தூய்மை, தருமம், நீதி ஆகிய பண்புகளை மாணவர்கள் செவ்வனே அறிய வேண்டும்; அறிந்து அதன்படி ஒழுகவேண்டும் இக்கருத்தை இளம்சந்ததியினர் உணரவேண்டுமென்பதற்காக மகான்களுடைய உபதேசங்கள், சமயகுரவர்களின் கருத்துக்கள் யாவும் போதிக்கப்படுகின்றன''

இவ்வாறு பருத்தித்துறை ஸ்ரீ சாரதா நிலைய சேவாச்சிரமப் போயாதின இந்து சமய பாடசாலைப்பரிசளிப்பு விழாவில் சேவாச்சிரமப் பொதுச்செயலாளர் பிர. இரத்தினசபாபதி தனது வருடாந்த அறிக்கையைச் சமர்ப்பித்துப் பேசுகையில் குறிப்பிட்டார்.


# அதிதுரித நிவாரணம் பெற, வைத்திய சாஸ்திரத் துறையில் ஒரு மகத்தான மருந்து-டிஸ்பிரின்

**டிஸ்பிரின் உங்களுக்கு அதிதுரித நிவாரணம் தருவதன் இரகசியம் இதோ!**

உலகின் பல பாகங்களில், மக்கள் வலி நிவாரணத்துக்கு அஸ்பிரின் உட்கொள்கிருர்கள். அஸ்பிரின் உங்களுக்கு நிவாரணமளிக்க முன்பு கரைந்தாக வேண்டும். சாதாரண அஸ்பிரின் விரைவிற் கரைவதில்லை. ஆகையால் நீங்கள் பெறும் நிவாரணம் மெதுவாகவே கிடைக்கிறது.

டிஸ்பிரின் கரையக் கூடிய அஸ்பிரினுகையால் அது உங்களுக்கு அதிதுரித நிவாரணம் தருகிறது. டிஸ்பிரின் மிக விரைவாகவும் முற்றுகவும் கரைந்து இரத்தோட்டத்திற் சீக்கிரம் செறிகிறது. இரத்தோட்டத்தில் விரைவாகச் செறிவதால் அது மிக வேகமாக உடம்பிற் செயலாற்றி உங்களுக்கு அதிதுரித நிவாரணம் தருகிறது. அதனுல்தான் வைத்திய நிபுணர்கள் அதிதுரிதமான அதிவன்மையான நிவாரணத்துக்கு டிஸ்பிரினைச் சிபாரிசு செய்கிறுர்கள்.

**எவ்வித பயமுமின்றி டிஸ்பிரின் உட்கொள்ளலாம்.**

சில மருந்துகள், கிரமமாகப் பாவித்தால் பெரும் பாதக விளைவுகளைக் கொடுக்கக் கூடும். தலைவலி, நோவு, காய்ச்சல், தடிமலுக்கு நீங்கள் பாவிக்கும் மருந்துகளைக் கிரமமாகப் பாவிக்க வேண்டியிருக்கும். இதற்கு, பயமின்றி உட்கொள்ளக் கூடிய மருந்தை நீங்கள் பாவிக்க வேண்டும். டிஸ்பிரின் உலகின் பல பாகங்களில் பல்லாண்டுகளாகப் பாவிக்கப்பட்டு, பாதுகாப்பான மருந்தென்றும் நம்பிக்கையோடு உட்கொள்ளக் கூடிய மருந்தென்றும் ஏற்றுக் கொள்ளப்படுவது. சில புது மருந்துகள் சுறுக்கில் நிவாரணம் தரக் கூடுமென்றுலும் அவை தரும் விளைவுகள் பெரும் பாதகமாய் முடியலாம். பிரபலமான பிரித்தானிய வைத்திய பிரசுரங்களில் எழுதும் வைத்திய நிபுணர்கள், உடம்புக்கு அபாயந் தரக்கூடிய சேர்பொருள்கள் கொண்ட அம்மருந்துகளைப் பாவிக்கக் கூடாதென்று எச்சரித்திருக்கிறுர்கள். உடம்புக்கு ஆபத்தான இவ்வித சேர்பொருள்கள் டிஸ்பிரினிற் கிடையாது. ஆகையால் எவ்வித பயமுமின்றி நீங்கள் டிஸ்பிரின் உட்கொள்ளலாம். வேறும் சில கரையாத மருந்துகள் வயிற்றில் அழற்சியை உண்டாக்கக்கூடிய துகள்களை விட்டு வைக்கக் கூடும். டிஸ்பிரின் முற்றுகக் கரைவதாகையால் அத்தகைய துகள்களை விட்டு வைப்பதில்லை. எனவே நீங்கள் நம்பிக்கையுடன் டிஸ்பிரின் உட்கொள்ளலாம்.

**டாக்டர்கள் சிபாரிசு செய்வது டிஸ்பிரின்**

உலகமெங்குமுள்ள வைத்திய நிபுணர்கள், அதிதுரிதமான அதிவன்மையான நிவாரணத்துக்கு டிஸ்பிரினைச் சிபாரிசு செய்கிறுர்கள். ஏனெனில் அதி சிறந்த வலி நிவாரணிகளில் ஒன்று டிஸ்பிரின் என்பது அவர்களுக்கு அனுபவத்தில் தெரியும்.

2 மாத்திரைகளை நீரிற் கரையவிட்டு அல்லது முழுமையாக ஏதாவது பானத்துடன் உட்கொள்ளுங்கள்.
குழந்தைகளுக்கு: பெட்டியிலுள்ள அளவுப் பிரமாணங்களைப் பாருங்கள்.

DISPRIN SOLUBLE ASPIRIN

தலைவலி, நோவு, காய்ச்சல், தடிமல், மாதவிடாய் வலி, வாத நோவுகளிலிருந்து அதிதுரித நிவாரணம் பெற டிஸ்பிரினை விடச் சிறந்தது வேறில்லை.

றக்கிட் அன்ட் கோல்மன் உற்பத்தி

P 0541


பேரையும் விமான திசை திருப்பலில் கொலையுண்ட விமானப் பணிப்பெண்ணின் உடலையும் நேற்றுமுன்தினம் சோவியத் யூனியனுக்கு துருக்கி அரசாங்கம் அனுப்பி வைத்தது.

இந்த விமானத்தை திசை திருப்பிய இருவரையும், சோவியத்துக்கு அனுப்பி வைக்க வேண்டுமென்றும் அங்கு அவர்கள் செய்த குற்றத்திற்குரிய விசாரணை நடந்து, அதற்குரிய தண்டனைகளை அவர்களுடைய நாட்டிலேயே அனுபவிக்க வைக்க வேண்டுமென்றும் சோவியத் மக்கள் கோரியுள்ளனர்.

சோவியத் பிரைஜைகளான இவ்விருவரையும் துருக்கிய அரசாங்கம் சோவியத் யூனியனிடம் திருப்பிக் கொடுக்குமா என்பது பற்றி எதுவும் கூறப்படவில்லை. இவ்விருவரும் துருக்கிய அரசாங்கத்திடம் தஞ்சம் கோரியுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

## தாய்லந்து நாட்டுப் பாடல்கள்

கொழும்பு, ஞாயிறு

1970-ம் ஆண்டுவானெலி விழாவை யொட்டி ஆசிய ஒலிபரப்புச் சங்கம் அளிக்கும் ஐந்தாவது நிகழ்ச்சி ஆகிய 'தாய்லாந்து நாட்டுப் பாடல்கள்' இம்மாதம் 21ம் திகதி இரவு 7 மணியிலிருந்து 2 மணிவரை ஒலிபரப்பாகும்.

தாய்லாந்து மக்கள் பௌத்த சமயத்தைத் தழுவியவர்கள். பௌத்த தர்மக் கொள்கைகள், அவர்களது பழக்கவழக்கங்கள், விவசாயம் இவற்றினைச் சித்தரிக்கும் நாட்டுப் பாடல்களும் இயற்கையிலெழும் கடலின் அலையோசை, நீர் வீழ்ச்சியின் ஓசை போன்றவற்றைச் சித்தரிக்கும் வாத்திய இசையும் இந்நிகழ்ச்சியில் இடம்பெறும். ஆசிய ஒலிபரப்புச் சங்கம் உதவிய நிகழ்ச்சிகளைத் தொகுத்துத் தருபவர் சரஸ்வதி குமாரசிங்கம்.

## உடனடி நடவடிக்கை

கோட்டை, ஞாயிறு

தனியார் ஸ்தாபனங்களிலும், தோட்டத் தொழிலிலும் ஏற்பட்டுள்ள 25 வேலை நிறுத்தங்கள் குறித்து ஒரு முடிவு எடுப்பதற்கு தொழில் ஆணையாளர் திரு. லக்ஷ்மன் டிமெல் உடனடி நடவடிக்கைகள் எடுக்க இருக்கிறுர்.

...ரமும் ஏ. எஸ். பி. முதலாம்தரம்:- முடியும் இருநட்சத்திரங்களும்

## 'கைத்தொழில் ஆசிரியரும் வேண்டும்'

உடுவில், ஞாயிறு

''நாட்டில் இன்று கைத்தொழில்கள் மிக வேகமாகவளர்ந்து வருகின்றன. நமது பிள்ளைகள் கைத்தொழில் வேலைகளில் ஈடுபட்டு வருகின்றனர். கைத்தொழிலில் மேலும் நல்ல பயிற்சி அளிக்கப்பட்டால் நிச்சயம் இங்கு ஒரு நல்ல கைத்தொழிற்பேட்டையை நாமே அமைத்துக் கொள்ளலாம் எனவே நமது பிள்ளைகளுக்குஇன்று தையல் மனையியல், வர்த்தகம் போன்ற கல்விக்கும் ஆசிரியர்களை நியமித்ததுபோல கைத்தொழில் ஆசிரியர் ஒருவர் நியமிக்கப்பட வேண்டும்''.

மானிப்பாய்மெமோறியல் மகாவித்தியாலய பெற்ருேர் ஆசிரியர் சங்கம் கல்லூரியில் நடத்திய கூட்டத்தில் மேற்கண்ட தீர்மானத்தை ஏகமனதாக நிறைவேற்றியது. இக் கூட்டத்திற்கு திரு. வி. ஜி. சம்பந்தன் தலைமை வகித்தார். மேற்படி தீர்மானத்தை கல்வி அமைச்சுக்கும் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கும் அனுப்புவது என்றும் தீர்மானிக்கப்பட்டது.

## கருத்தரங்கு நடத்த முடிவு

மாவிட்டபுரம், ஞாயிறு

'தமிழ் மக்களின் பிரச்னைகளைத் தீர்க்கத்தக்க யோசனைகளை மக்கள் அறியும் பொருட்டு கிராமந்தோறும் கருத்தரங்குகளை நடத்துவதென காங்கேசன்துறைத் தமிழரசு வாலிப முன்னணி முடிவுசெய்துள்ளது.

முன்னணிக்கூட்டம் காங்கேசன்துறையில் திரு. சி. நவரத்தினம் தலைமையில் நடைபெற்றபோது இவ்வாறு முடிவுசெய்யப்பட்டது.

முன்னணியின் புதிய நிர்வாகிகளாகப் பின்வருவோர் தெரிவுசெய்யப்பட்டனர்:

தலைவர்: மு. தேவராசா, உபதலைவர்: சி. லிங்கவேலாயுதம், காரியதரிசி: நா. ஜெயசீலன், உபகாரியதரிசி: பொ கணேசமூர்த்தி, தனுதிகாரி: சி. பாலசுப்பிரமணியம்.

10 பேர் கொண்ட நிர்வாகசபையும் தெரிவுசெய்யப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மணிவாக்கு

படைத்த இறைவனை அறிவதற்கே மனிதனுக்கு அறிவைத்தந்தார் கடவுள். ஆனால் மனிதனே படைத்தவனையே மறந்து விடும் வகையில் தனது அறிவை துஷ்பிரயோகம் செய்கிறான்.

— மகாத்மாகாந்தி


# ஈழநாடு

Eelanadu National Tamil Daily
Telegram: "EELANADU" Jaffna;
Post Box: 49, Jaffna: Telephone: 889.

சாம்பாஷணம் சாதாரண வருஷம் ஐப்பசி மாதம் 2-ந் திகதி (19-10-70)


## இலவச அரிசியும், இலவசக்கல்வியும்

இலங்கையின் பண நிலைமை மிக மோசமாக இருப்பதாயும், இரண்டு கொத்து பங்கீட்டு அரிசியை யும் வாங்காமல் இருப்பதே 'நாட்டைக்காக்கும் நிதி'க்கு பணம் கொடுப்பதைவிடப் பெரிய சேவையாகும் என்றும் வர்த்தக அமைச்சர் இலங்கரத்ன நாட்டுக்கு விடுத்துள்ள ஒரு முக்கிய வேண்டுகோளில் கேட்டுள்ளார் இதனால் அரசாங்கத்துக்கு மட்டுமன்றி எதிர்கால தலைமுறைக்கும் பெரு நன்மை செய்ததாகுமென்றும் அவர் வலியுறுத்துகின்றார்.

சென்ற யுத்தகாலத்தில் அரிசியை மக்களுக்கெல்லாம் சீராக விநியோகிக்கவும் இங்கு பட்டினிச் சாவு இல்லாமல் தடுக்கவுமே அரிசிப் பங்கீட்டு முறையை அரசாங்கம் கொண்டுவந்தது. யுத்த காலத்தில் வங்காளத்தில் 33 லட்சம் பேர் பட்டினியால் இறந்திருக்கையில், இலங்கையில் ஒருவராவது இவ்விதம் இறக்காதபடி அரசாங்கம் பாதுகாத்தது நன்றியுடன் போற்றத்தக்கதாகும். இதற்குக் காரணம் அரிசிப் பங்கீட்டு முறையேயாகும். அவ்வித முறையில் இங்கு அரிசியை விநியோகிக்காமல் இருப்பின் இங்கும் பட்டினிச் சாவுகள் ஏற்பட்டிருக்கும். ஆரம்பத்தில் அரிசி இலவசமாக அளிக்கப்படவில்லை. அரசாங்கம் உதவிப் பணம் அளித்து மலிவாக அதை மக்களுக்கு விற்றது. பின்னர் சென்ற அரசாங்கம் ஒரு கொத்து அரிசியை இலவசமாகவும் அளித்தது.

தேவைப்பட்டவர்களுக்கு மட்டுமன்றி செல்வந்தர்கள் நிலச் சொந்தக்காரர்கள் எல்லாருக்குமே இலவச அரிசி வழங்கப்பட்டது. வெளி நாடுகளில் ஒரு கொத்து அரிசியை ஒரு ரூபாய் 56 சதம் விதம்வாங்கி, நாட்டில் ஒவ்வொருவருக்கும் வாராவாரம் ஒரு கொத்து அரி[illegible] வர்த்தகஅமைச்சர் மேற்குறித்த வேண்டுகோள் விடுக்கவேண்டிய அவசிய மேற்பட்டது.

உலகத்திலே எந்த நாட்டிலும் இவ்விதம் இலவச அரிசி அளிப்பதில்லை. தேவைப்பட்டவர்களுக்கு அளிக்கலாம்; அளிக்க வேண்டியதே. தேவைப்பட்டவர்களை மனுச்செய்யச் சொல்லி, அவர்களது குடும்பநிலையைப் பார்த்து இலவச பங்கீட்டரிசி அளிக்கலாம். வேலையில்லாமல் கஷ்டப்படுபவர்களுக்கு இரு கொத்து அரிசியும் இலவசமாகவும் அளிக்கலாம். ஆனால் தேவையில்லாதவருக்கு, மனுச்செய்யாதவர்களுக்கு இலவச அரிசி அளிப்பதில்லை என்ற நியதி ஏற்படுத்தினால், நாட்டுக்கு அதனால் நன்மையாவதுடன் அரசாங்கத்தின் பண நெருக்கடியும் குறையும். இவ்வித மாறுதல் செய்வதற்காக யாரும் அரசாங்கத்தைக் குறைகூறமுடியாது. அரிசியை விலைகொடுத்து வாங்கக்கூடிய வாய்ப்பில்லை என்று ஆதாரங்களுடன் தெரிவிப்பவர்களுக்கு இலவச அரிசியை மறுக்கவும் கூடாது.

இதேபோல இலங்கையில் ஏழைகளுக்கு மட்டுமன்றி பணக்காரர்களுக்கும் இலவசக்கல்வி அளிக்கப்படுகின்றது இதனால் அரசாங்கத்துக்குக் கல்விச்செலவு சமாளிக்கமுடியாமல் அதிகரித்துக்கொண்டு போகின்றது. இதில் வெளிநாட்டுச் செலாவணி நஷ்டம் இல்லாவிடினும், சம்பளம் கொடுத்து படிக்கக்கூடிய பிள்ளைகளிடமும் சம்பளம் வசூலிக்காமல் விடுவானேன்? பண நெருக்கடி அதிகமாக இருக்கும்நிலையில், இவ்விதமான செலவுகள் செய்வது ஊதாரித்தனமே. இவ்விஷயத்திலும் பிள்ளைகளின் சார்பாகப் பெற்றோர்களை மனுச் செய்யும்படி கேட்கலாம்.

கனடாவில் கடத்தப்பட்ட

# மந்திரியும், ராஜதந்திரியும் கொலை செய்யப்பட்டுள்ளனர்

ஒட்டாவா. அக் 18 கனடாவில் குவபெக் விடுதலை முன்னணியினால் கடத்திச் செல்லப்பட்ட பிரிட்டிஷ் ராஜதந்திரியும், குவபெக் தொழில் அமைச்சரும்கொல்லப்பட்டிருக்கிறார்கள். இவர்கள் இருவரையும் விடுவிப்பதற்கு தீவிரவாதிகள் விதித்த நிபந்தனைகளுக்கு கனடா அரசாங்கம் இணங்க மறுத்ததினால்இவர்கள் கொலைசெய்யப்பட்டிருப்பதாகத் தெரிகின்றது. குவபெக் விடுதலை முன்னணியை கனடா அரசாங்கம் தடை செய்திருப்பதுடன் தீவிரவாதிகளைத் தேடிக் கண்டுபிடிப்பதற்கு தீவிர நடவடிக்கைகளையும் எடுத்தது. மொன்ட்றியாப் பகுதியில் தீவிரவாதிகளை ராணுவமும் பொலிசாரும் வேட்டையாடி வருகிறார்கள்.

குவபெக் தொழில்மந்திரி பீரிலா போட்டேயின் சடலம் ஒரு ஜீப்வண்டியில் கிடக்கக் கண்டுபிடிக்கப்பட்டது, 49 வயதான பிரிட்டிஷ் ராஜதந்திரி திரு. குரோஸின் சடலம் ஒரு டாக்ஸி வண்டியில் கிடந்தது.

இதே நேரத்தில் குவபெக் இளம் குடும்பப் பெண்ணை இத்தேசிய வாதிகள் கடத்திச் சென்று எட்டுமணி நேரம் சித்திரவதை செய்தனராம். இவ்வியக்கத்தைக் குறிக்கும் எவ்.எல் யூ எனும் எழுத்துக்களை கூரிய ஆயுதமொன்றினால் தனது வயிற்றில் கீறியதோடு சித்திரவதை செய்தார்கள் என்று அப்பெண் குவபெக் பொலிசாரிடம் கூறியுள்ளார். இப்பெண்வீதியோரத்தில் நினைவற்றநிலையில் கிடப்பதைக் கண்ட பொலிசார் இவரை வைத்திய சாலைக்கு எடுத்துச் சென்றனர்.

# வழுக்கை ஆறும் மீனவப்பெண்களும்

எழுதுமட்டுவாள், ஞாயிறு எழுதுமட்டுவாள், மிருசுவில் பளை, முதலிய இடங்களுக்குச் சென்று மீன்விற்கும் நாகர்கோவில் மீனவப் பெண்களின் வாழ்க்கை மிகப் பரிதாபகரமானது. எழுதுமட்டுவாளையும் நாகர் கோவிலையும் பிரிக்கும் வழுக்கை ஆற்றைக் கடந்தே இவர்கள் மேற்கூறிய இடங்களுக்குச் செல்லவேண்டும். சேறும் சகதியுமான இந்த ஆற்றில் பழக்கப்பட்ட ஒற்றையடிப்பாதை மூலம் செல்கையில் சற்று அடி பிசகினால் ஆபத்தை எதிர் நோக்கும் இம்மீனவப்பெண்கள் கழுத்தளவு தண்ணீரைக் கடந்து மீன்சுமையுடன் மறுகரை சேரும் காட்சி கண்ணராவியாகும். நாகர் கோவில் கப்பல் திருவிழாக் காலங்களில் இந்த ஆற்றுப்பாதையில் பலர் சேற்றில் சிக்கி மாண்டது குறிப்பிடத்தக்கது. ஆற்றைக்கடப்பதில் பொது மக்களும் பெரிதும் அவதிப் படுகின்றனர்.

## முஸ்லிம் அல்லாதவர் . . .

(1-ம் பக்கத்தொடர்ச்சி)

ற்கு முன்பாகவும் போயிருக்கிறேன். பள்ளிக்கு உள்ளே போனேன். எனக்குள்ளே குரான் படித்தேன் 12-20 மணிவரை குரானைப் படித்தேன். அதன்பின் மொகசீன் தொழுகைபற்றி அறிவித்தார். 12-30 மணிக்கு 'கொத்துபா' ஆரம்பமானது. பின் நிறைய ஆட்கள் வந்தார்கள்.

கதீப் மேடையில் ஏறி கொத்துபாவை ஆரம்பித்தார். மேடையில் ஏறியதும் அசலாம் அலைக்கும் என்றார். பின் மேடையில்உட்கார்ந்து விட்டார். 3 படி இருக்கிறது உயரமான படியில் உட்கார்ந்தார். அதன் பின் முகதீன் கொத்துபா ஆரம்பிப்ப[illegible]

யோகத்தர்கள் பள்ளிக்கு வந்திருப்பதை கண்டிருக்கிறேன். காரியாதிகாரி விசாரணைக்கு வந்திருக்கிறார். பெரிய வைபவம் பள்ளியில் நடக்கும்போதும் வந்திருக்கிறார்கள்

பள்ளியில் தண்ணீர் தடாகம் இருக்கிறது. முறைப்படி கை கால், வாய் கழுவியபின் பள்ளிக்கு செல்லவேண்டும். முஸ்லிம் அல்லாதவர்கள் வந்தால் காலைக்கழுவிவிட்டு, பள்ளிக்கு வருவார்கள். செருப்பையோ சப்பாத்தையோ கழட்டி விட்டுவருவார்கள்.

நீதியரசர்: பள்ளிவாசலை தெய்வீக இடமாக கருதுகிறீர்கள்?–ஆம்.

நீதி: மண்டபத்தையும் [illegible]

பிக் கொடுத்தேன். அதை சுட்டிக் காட்டி சொன்னேன் அவசியம் போகவேண்டுமென்றேன். டிக்கட்டுக்கு மாத்திரம் ஒருதுண்டு தந்தார்கள். கொ[illegible] மத்திய

## யெகோவாவின் சாட்சிகளின் மகாநாடு

திருக்கோணமலை, திங். திருக்கோணமலை மத்திய வீதியிலுள்ள புனித சவேரியார் பாடசாலையில் இம்மாதம் 20-ம் திகதி யெகோவாவின் சாட்சிகளின் மகாநாடு ஆரம்பமாகிறது. இம்மகாநாடு 3 நாட்கள்வரை நடைபெறவுள்ளது.

இலங்கையிலுள்ள யெகோவாவின் சாட்சிகளின் மேற்பார்வையாளரான டீ. ஆர். மத்யூஸ், டாக்டர் ரி. சிங்கராஜா, திரு. ராஜன் கதிர்காமர், திரு. ஆர். விஸ்வலிங்கம் உட்படப் பல பிரமுகர்கள் இம்மகாநாட்டில் உரையாற்றுவர்.

## 26-ந் திகதி விவாதம்

கோட்டை, ஞாயிறு செனட் சபையைக் கலைத்து பிரதிநிதிகள் சபையில் நியமன அங்கத்தவர்களின் தொகையை அதிகரிக்க வசதி செய்யும் மசோதா இம்மாதம் 26-ந் திகதியும் 27-ந் திகதியும் மக்கள் பிரதிநிதிகள் சபையில் விவாதிக்கப்படவிருக்கிறது.

## எள்ளுத் தட்டுப்பாடு

மாவிட்டபுரம், ஞாயிறு மக்களின் முக்கிய பாவனைப்பொருளாக விளங்கும் எள்ளு வெளிநாட்டுக்கு அனுப்பப்பட்டதால் இங்குள்ள மக்கள் பெரிதும்பாதிக்கப்பட்டுள்ளனர்.

மக்களின்முக்கிய பாவனைக்குரிய நல்லெண்ணெய்க்கு மூலகாரணமாக விளங்கும் எள்ளு இங்குள்ள மக்களுக்குப் போதாமல் இருக்கும் போது அதைப் பெருமளவில் வெளிநாடுகளுக்கு அரசு அனுப்பியதால் எள்ளுக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது இதனால் இதைத் தொழிலாகக் கொண்டு வாழும் பிராம்பத்தை, பண்டத்தரிப்பு உட்பட மற்றும் பல கிராமங்களிலுள்ள ஆலைக்காரர் எள்ளைப் பெறமுடியாது கஷ்டப்படுகின்றனர்.

எள்ளுத்தட்டுப்பாடுகாரணமாக நல்லெண்ணெய்பாவிப்பவர்கள் சுத்தமான எண்ணெய் பெறமுடியாதிருப்பதாகவும் கலப்பட எண்ணெயே கிடைப்பதாகவும் குறைப்படுகின்றனர்.

எண்ணெய் ஆலைக்காரர்கள் இதுசம்பந்தமாக அரசாங்கத்திற்கு மகஜர் அனுப்பி வைத்துள்ளனர்

## விவசாயிகள் பாதிப்பு

கிளிநொச்சி, ஞாயிறு பரந்தன் கிராமிய வங்கியினர் கடந்த இரு மாதங்களாக நகை அடைவு பிடிப்பதை நிறுத்தியுள்ளனர். இதனால் முரசுமோட்டை, கண்டாவளை, ஆனையிறவு, கரடிப்போக்கு விவசாயிகள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

பெரும்போகச் செய்கை ஆரம்பித்த இவ்வேளையில் பூச்சி மருந்துகள், பசளை, உர வகைகளை வாங்கப் பணமின்றிக் கஷ்டப்படுவதாகவும் தெரியவருகிறது.

மீண்டும் கிராமிய வங்கியில் நகை அடைவு பிடிக்க ஆவன செய்யுமாறு கிளிநொச்சி ஆட்சிமன்ற அங்கத்தவர் திரு. வி. ஆனந்தசங்கரியை விவசாயிகள் கேட்டுள்ளனர்.

## நெல்விதைக்க சென்றவர் பிணமானார்

பூநகரி, ஞாயிறு வயலில் நெல்விதைப்பதற்காக தனது மனைவி பிள்ளை [illegible]

## ஜயாறன் எழுதுவது

சாதாரணமாக சமயப்பிரசங்கமென்றால் இக்காலத்தில் கூட்டம் அதிகமாக வராது. தொடர் பிரசங்கமென்றால் கூட்டம் நாளுக்கு நாள் குறைவதைப் பார்க்கலாம். ஆனால் பம்பாயிலிருந்து சின்மய மிஷனைச் சேர்ந்த ஸ்ரீ பார்த்தசாரதி அவர்கள் கொழும்பிலே ஸ்ரீ ராமகிருஷ்ண மடத்தில் பகவத் கீதையைப்பற்றி செய்து வரும் பிரசங்கங்களுக்குகூட்டம் வரவர அதிகரிப்பதாகத் தெரிகிறது.

முதல்நாள் ஆரம்பக்கூட்டத்துக்குச்சென்றிருந்தேன். செனேட் சபைத் தலைவர் ரத்நாயக்கா தலைமை வகித்துப் பேசினார். தபால்அமைச்சர் குமாரசூரியர், ஆரம்பித்துவைத்துப் பேசினார். வரவேற்பு சபைத் தலைவர் முன்னாள் நீதியரசர் சிவசுப்பிரமணியம், வரவேற்புரை வழங்கினார்' ஸ்ரீ பார்த்தசாரதி எல்லாருடைய மனதையும் கவரும் முறையில் இடையிடையே நகைச்சுவையுடன் பேசினார்.

"பகவத்கீதை இந்துக்களுக்கு மட்டுமோ. இந்தியர்களுக்கோ அல்லது பிராமணர்களுக்கோ உரிய நூலென்று சிலர் நினைக்கலாம் அது தவறு. இது உலகிலுள்ள மக்கள் அனைவருக்கும் வாழ்க்கைக்கு நல்ல வழிகாட்டும் நூலாகும். பால் எப்படி உலகிலுள்ள மக்களுக்கெல்லாம் பயன்படுமோ அதுபோலவே பகவத்கீதையும்.

வேதங்களின் சாராம்சமே உபநிடதங்கள் பகவத்கீதையோ உபநிடதங்களின் 'எஸ்ஸன்ஸ்' எல்லா உபநிடதங்களும்பசுவாயின், அதைக் கறந்து பாலாகக்கொடுப்பது பகவத்கீதை வாழ்க்கையாயாகிற சமுத்திரத்தில் அமைதிக்கும் பேரின்பத்துக்கும் வழிகாட்டுவதுகீதை ஆகவே இது உலகிலே எல்லா நாடுகளிலுமுள்ள மனிதருக்கும் பயன்படிக்கூடிய பொதுவான நூலாகும்'' என்றுகருத்துப்படக் கூறினார்.

0 0 0

மறுநாள் 'டைம்ஸ்' பத்திரிகையில் மட்டும் அமைச்சர் குமாரசூரியர் பேசியதின் சாரம் வெளியாயிற்று. மந்திரி சகாக்கள் எல்லாரும்வந்திருந்து கேட்கவேண்டிய பிரசங்கம்என்று அவர்குறிப்[illegible]

மூடநம்பிக்கைஎன்றும் காட்டுவதற்கும் பரிகசிக்கும் படங்கள் போடுவதற்கும் அப்பத்திரிகையில் இடமுண்டு ஆனால் வாழ்க்கைக்கு நல்ல வழிகாட்டக்கூடிய மனம் அமைதியாக இருக்கச் செய்ய, பகவத்கீதையைப்பற்றி, சிறந்தபேச்சாளர் வந்து பேசினாலும், அதைப்பற்றி ஒருவார்த்தையும் எழுத அப்பத்திரிகைகளில் இடம் கிடைக்காது. என்றாலும் காலையில் எழுந்ததும் அந்தப் பத்திரிகையைத்தான் வாங்கிப் படிக்க வேண்டியுள்ளது தலைவிதி' என்றுஓர் அன்பர் மிகமனக் கசப்புடனே சொன்னார். இந்த நிலைமாறி இவ்வித நல்ல விஷயங்களுக்கும் பத்திரிகைகளில் இடம் கிடைத்தால் மக்கள்மனம் அமைதியடைய உதவியாகஇருக்கும். சென்னை 'ஹிந்து'பத்திரிகையில் இவ்வித விஷயங்களுக்கு கடைசிப் பக்கத்தில் தினசரி இடமளிக்கின்றனர். பிரசங்கத்துக்கு நேரில் செல்ல முடியாதவர்கள், அதன் சாராம்சத்தை பத்திரிகைமூலம் அறிந்து பயன்பெற முடிவதாக உள்ளது.

திரு பார்த்தசாரதி சென்னையைச் சேர்ந்தவர். ஒரு தமிழர் சர்வகலாசாலையில் சட்டம் உள்ளிட்டு பல பட்டங்களைப் பெற்றவர். ஒன்பது வருடங்கள் ஒரு கம்பெனியிலே வேலைபார்த்து பின்னர் அந்த வேலையை விட்டுவிட்டு சுவாமி சின்மயானந்தாவின் ஸ்தாபனத்தில் சேர்ந்து அதன் பிரசாரகரானார். 'வாழும் கலை' 'நிலையானதைத் தேடு'. 'தியானக்கலை' முதலிய நூல்களை ஆங்கிலத்தில் எழுதியுள்ளதுடன் ஸ்ரீ சங்கராச்சாரிய சுவாமிகளின் 'ஆத்மபோத'த்துக்குவிரிவான விமர்சனம் செய்து நூல் வெளியிட்டுள்ளார். அவர் இந்தியாவில் மட்டுமன்றி வெளிநாடுகளிலும் கீதா உபந்நியாசங்கள், செய்து புகழ்பெற்றவர். மீண்டும் அழைப்பின்மீது இலங்கை. சிங்கப்பூர், ஹாங்காங், ஜப்பான், கொரியா, முதலிய இடங்களில் 10 வாரம் சுற்றுப்பிரயாணம் செய்கின்றார். மேற்கு நாடுகளுக்கும் அடுத்த வருட ஆரம்பத்தில் செல்ல இருக்கிறார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

...வாருக்கும் இலவச அரிசி வழங்கப்பட்டது. வெளி நாடுகளில் ஒரு கொத்து அரிசியை ஒரு ரூபாய் 56 சதம் வீதம்வாங்கி, நாட்டில் ஒவ்வொருவருக்கும் வாரா வாரம் ஒரு கொத்து அரிசியை இலவசமாகவும் மற் ருெரு கொத்தை 75 சதம் வீதமும் வழங்கி இப்போது வந்துள்ள அரசாங்கம் தேர் தல் வாக்குறுதியை நிறை வேற்றுவதற்காகச் செய் துள்ளது. இந்தக் கணக்கின் படி பார்த்தால் ஒவ்வொரு வருக்கும் வாரமொன்றுக்கு 2 ரூபாய் 37 சதம் வீதம் அரசாங்கம் இலவசமாகக் கொடுக்கின்றது. அரிசியை வெளிநாடுகளிலிருந்து வாங் கியே கொடுக்கவேண்டி யுள்ளதால், வருடத்திலே வெளிநாட்டுச் செலாவணி ஐயுங்கோடிக்கணக்கில்நாடு இழக்கவேண்டியுள்ளது. ஏற்கெனவே நாட்டின் பண நிலை மோசமாக இருக்கை யில், இந்த அதிகப்படி செலவை சமாளிக்க முடி யாத காரணத்தாலேயே,

நெருக்கடி அதிகமாக இருக் கும்நிலையில், இவ்விதமான செலவுகள் செய்வது ஊதா ரித்தனமே. இவ்விஷயத் திலும் பிள்ளைகளின் சார் பாகப் பெற்றோர்களை மனுச் செய்யும்படி கேட்கலாம். உண்மையில் தேவையுள்ள பிள்ளைகளுக்கு இலவசக் கல்வி அளிக்கலாம். அப் படிச் செய்வதால், யாரும் இதை எதிர்க்க நியாய மில்லை. இதனால் பள்ளிக் கூடத்தில் ஒழுங்கும் கட்டுப் பாடும் அதிகரிப்பதுடன் அரசாங்கத்தின் சங்கடமும் குறைந்து வேறு பல ஆக்க வேலைகளுக்கு மிச்சமாகும் பணம் பயன்படுவதாக இருக்கும். மக்களின் அபி மானத்தையும் ஆதரவை யும் இழக்கவேண்டியிருக் குமோ என்று அரசாங்கம் அஞ்சத் தேவையில்லை. இதற்கு மாறாக, பணநெருக் கடி மிகவும் இருக்கையில், தேவையற்றவர்களுக்கு உதவிகளைத் தொடர்ந்து அளிப்பதுதான் பலவிதங் களிலும் தவருகும்.

# 'ஆங்கில மூலம் போதனை முற்ருக ஒழிக்கப்படும்'

**— கல்விமா அதிபர்**

கொழும்பு, ஞாயிறு

அடுத்தாண்டில் இருந்து நாட்டின் சகல பாடசாலை களிலும் ஆங்கிலமூலம் கல்வி யளித்தல் தடைசெய்யப் படும். முதலாம் வகுப்பி லிருந்து இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்படும்,

கல்விமா அதிபரும் கல்வி அமைச்சின் நிரந்தர காரிய தரிசியுமான டாக்டர் பிரேம தாசா உடுகம மேற்கண்ட வாறு அறிவித்துள்ளார்.

பல தனியார் பாடசாலை களிலும், கொழும்பிலும் மற்றும் வெளியிடங்களிலு முள்ள பெரிய பாடசாலை களிலும் ஆங்கிலமூலம் போதனை நடைபெறுகின் றது. மேற்படி தீர்மானத் தின்படி இவ்வாறு ஆங்கில மூலம் போதனை முற்ருக பத்து வருடத்திற்குள் ஒளிக் கப்பட்டுவிடும் எனத் தெரிய வருகிறது.

(சி. பி ஏ.)

......

## இறைவனை நினைத்துப் பாடுங்கள்

மாவிட்டபுரம், ஞாயிறு

"தரமற்ற சினிமாப் பாடல்களைப் பாடிப் பொழு தைப் போக்காது தேவார திருவாசகங்களையும், ஏனைய அருட்பாக்களையும் இறை வனை நினைத்து பாடுவது பயன் தரும் என கோப் பாய் வட்டார வித்தியா தரிசி திரு. வே சண்முக நாதன் மாவை அருள்நெறி மன்ற 2-வது ஆண்டு விழாவை தொடக்கி வைத் துப் பேசுகையில் கூறினர்.

மன்றத் தலைவர் திரு. அருள் செ. குணபாலசிங் கம் தலைமை வகித்தார். 'சொக்கன்' உட்பட வேறு பலரும் பேசினர். இசை மணி வ செல்லத்துரை யின் பண்ணிசைக்கச்சேரி யும் மற்றும் இசைநிகழ்ச்சி களும் இடம்பெற்றன.


இராமநாதன் கல்லூரிப்

**பரிசளிப்பு விழா**

21-10-70 புதன்கிழமை மாலை 5 மணிக்கு நடைபெறும்

பெற்றேரையும் பழைய மாணவிகளையும் அன்புடன் அழைக்கின்ருேம்

அதிபரும், ஆசிரியரும்

இராமநாதன் கல்லூரி சுன்ஞகம். 2517


...தார். மேடையில் ஏறிய... அசலாம் அலைக்கும் என்று, பின் மேடையில்உட்கார்ந்து விட்டார். 3 படி இருக்கிறது உயரமானபடியில் உட்கார்ந் தார். அதன் பின் முகதீன் கொத்துபா ஆரம்பிப்பதாக கூறினர். கதீப் எழுந்து கொத்துபா ஓதினர். அவர் அரபுமொழியில் ஓதி அதன் பின் அரபுத் தமிழில் வாசித் தார். கித்தாப் என்ற புத்த கத்திலிருந்து வாசித்தார். சாதாரணதமிழில் சிலசொற் கள், அரபியில் பொருத்த மில்லாமல் இருக்கும். சில எழுத்துக்கள் வித்தியாசமாக வாசிக்கப்பட்டால் அர்த்தம் புரியாது. அதன்பின் கதீப் உட்கார்ந்தார். ஒன்றரை நிமி டம் இருந்துவிட்டு திரும்ப எழும்பி அரபுமொழியில் பிரார்த்தனை செய்தார். முக மது தமிழில் சொன்ன வற்றை அரபுமொழியில் மட் டும் வாசித்தார் அதன்பின் கீழே இறங்கினர்.

முகசீன் தொழுகை ஆரம் பிக்கப்போவதாக அறிவித் தார் மேடைக்குப்பக்கத்தில் மேகராப் என்ற இடமிருக்கி றது. கதீப் கையை உயர்த்தி பின் கையை கட்டியபடி குரானின் 1-ம் அத்தியாய த்தைஒதினர். தொழுகைக்கு வந்தவர்களும் கையை கட் டிக்கொண்டார்கள். கதீர் மேற்குப்பக்கம் பார்க்க தொழுகைக்கு வந்தவர்க ளும் மேற்குப் பக்கம் பார்த் தார்கள். பின் அத்தொழுகை முடிந்தது கதீப் பிரார்த்த னையை ஆரம்பித்தார். பிரார் த்தனை என்றல் இறைவனி டத்தில்வேண்டுதல் அராபிய மொழியில் 'துவ என்பார்கள் கதீப் அதனை ஓதுவார்கள். மற்றவர்கள் 'ஆமென்' என் பார்கள். ஒவ்வொருவார்த் தைக்கும் ஆமென் என்பார் கள்.

நீதியரசர்: 'ஆமென்' என் றல் என்ன?- அவர் கேட் பதை நாங்களும் அங்கீகரிக் கிறேம், என்பது.

மஜீத் மௌலவி தொடர் ந்து கூறியதாவது: திருக் குரானிலிருந்து ஒரு வச னத்தை ஓதினேன். அதற்கு அர்த்தம் சொல்லுவதற் கிடையில் எம். பி. எம் பி. என்று சத்தம் கேட்டது. அதோடு அங்கிருந்தவர்கள் கவனம் வெளிப்பக்கம்திரும் பியது. அதோடு நான் நிறுத்திவிட்டேன். நான் நின்ற இடத்திலிருந்து கொஞ்ச தூரத்தில் அழகக் கோன் வந்துநின்ருர். எம் பி, அங்கிருந்துபோனபின் கதீசை தொடர்ந்து நடத்தி னேன். சிலர் இருந்தார்கள். மற்றும் சிலர்சென்றுகொண் டிருந்தார்கள், சுன்னத்து தொழுகையில் 2 நிமிடம் வரை ஈடுபட்டிருந்தேன். அதன்பின் பள்ளியை விட்டு ரேட்டுபக்கமாகபோனேன்.

முஸ்லிம் அல்லாதவர்க ளான காரியாதிகாரி உத்தி யோகத்தர்களோ செருப்பையோ சப்பாத் தையோ கழட்டி விட்டுவரு வார்கள்.

நீதியரசர்: பள்ளிவாசலை தெய்வீக இடமாக கருது கிறீர்கள்?- ஆம்.

நீதி: மண்டபத்தையும் விருந்தையையும்சேர்த்தா?- ஆம்.

நீதி: நீங்கள் செய்ததற்கு முதல் நடந்ததென்ன?- ஜும்மா

நீதி: ஜும்மா எப்பமுடிவ டைந்தது?- தொழுகைக்கு வந்தவர்கள் எழுந்ததும் முடிவடைந்தது.

நீதி: நீங்கள் செய்தது என்ன?- கதீஸ்.

நீதி: கதீஸ் எப்ப ஆரம்ப மாகும்?- தொழுகை முடிந்த தும் கதீஸ் ஆரம்பமாகும்

இக்கட்டத்தில் எதிர் மனு தார் சார்பில் ஆஜரான அட்வகேட் எம். திருச்செல் வம் குறுக்கு விசாரணையை ஆரம்பித்தார்.

வழ: கட்டளை கிடை த்ததா? -இல்லை

வழ; கட்டளை கிடைக்கா மல் கோர்ட்டிற்கு வந்தீர்? - ஆம்,

வழ: மனுதாரை நன்ரு கத் தெரியும்? -ஆம்

வழ: அங்குள்ள தியேட் டர் அறையொன்றில் இருக் கிறீர்? -இல்லை

வழ: எங்கு இருக்கிறீர்?- அப்துல் ரகுமான் கடை யின் ஒரு பகுதியில் இருக்கி றேன்.

வழ: உமக்கு சொந்த வீடு இல்லை?-இல்லை

குறுக்கு விசாரணையில் மஜீத் மௌலவி கூறியதா வது: ஊதுபத்தியைஉற்பத்தி செய்து விற்பேன் நானே ஊதுபத்தியை செய்வேன் அது பெரிய தொழிலல்ல தேர்தலுக்கு முன் அம்பாறை மாவட்டத்தில் கொந்த ருத்துவேலை செய்தேன்

வழ: சமீபத்தில் இந்தியா போனீரா?- ஆம்

வழ: பாஸ்போட் இருக் கிறதா?-ஆம்

வழ: இலங்கை பாஸ் போட்டா இந்திய பாஸ் போட்டா?-இலங்கை பாஸ் போட்

வழ: பாஸ் போட் இங்கு இருக்கிறதா?-இல்லை

வழ: இந்தியாவிற்கு எப் படி போனீர்?-கப்பலில்

வழ: என்னத்திற்கு போ னீர்? - சொந்தக்காரர் மதுரையில் வருத்தமாக இருந்தார்.

வழ: போகவர உமக்கு யார் செலவுதந்தது?- போன போது என்பணத்தில் சென் றேன். வரும்போது சொந் தக்காரர் பணம் தந்தார் கள்.

வழ: போவதற்கு எக்சே ன்ஜ் பேர்மிட் எடுத்திரா? -இல்லை.

வழ:எக்சேன்ஸ்எடுக்காமல் எம்படி டிக்கட் எடுத்தீர்? -முன்பு இரண்டுதடவை எடுத்து போகாமல் திருப் பிக் கொடுத்தேன். அதை சுட்டிக் காட்டி சொன்னேன் அவசியம் போகவேண்டு மென்றேன். டிக்கட்டுக்கு மாத்திரம் ஒருதுண்டு தந் தார்கள். கொழும்பு மத்திய வங்கியில் துண்டு தந்தார் கள்.

வழ: எத்தனை வயதில் இலங்கைக்கு வந்தீர்? -1949-ல் கடைசி முறை யாக இந்தியாவிலிருந்து வந் தேன். முதல் தடவையாக 1939-ல்.

வழ: அப்படியானல் அக் கரைப்பற்று உமது சொந்த ஊரல்ல?- நான் இலங்கை பிரஜா உரிமை எடுத்தேன், அதுதான் சொந்த ஊர் இந் தியாவில் பிறந்தேன் இலங் கைக்கு 39-ல் வந்தேன். பின் 41-ம் ஆண்டுவரை பண் டாரவளை சென். மேரிஸ் பாடசாலையில் படித்தேன். அப்போது 15 வயது. 1924ம் ஆண்டு பிறந்தேன். ஆரம் பக் கல்வியை இந்தியாவில் படித்தேன். இந்தியாவில் தமிழில் படித்தேன். 6-ம் வகுப்புவரை படித்தேன், பண்டாரவளையில் தமிழில் படித்தேன், 1941-ம் ஆண்டு இந்தியா போனேன்.

வழ: அந்தநேரம் பாஸ் போட் இருந்ததா?-இல்லை

வழ: 49-ல் வரும்போது இந்தியா பாஸ்போட்டில் வந்தீரா?-அந்த நேரத்தில் பாஸ்போட் இல்லை, ஈ போர்ம் ஒன்று தந்தார்கள், 49-ல் வந்து அக்கரைப் பற் றில் திருமணம் செய்தேன், இலங்கை பிரஜையாக 1950-ல் விண்ணப்பித்தேன்.

வழ: பதிவு பிரஜையாக உரிமை கொடுக்கப்பட்டது? -ஆம் 1955-ம் ஆண்டு பிரஜா உரிமை கிடைத்தது.

வழ: பிரஜா உரிமை நம்ப ரென்ன?- 1414, பைல் நம் பர் எனக்கு ஞாபகமில்லை.

வழ: இலங்கைப் பெண் ணின் கணவன் என்ற கருத் தில் பிரஜா உரிமைக்கு மனுச் செய்தீர்?-ஆம்.

நீதி: எத்தனை பிள்ளைகள் இருக்கிறது?- 8 பிள்ளைகள் உண்டு.

நீதி: கஷ்டங்கள் இல்லா மல் பிரஜா உரிமை கிடைத் ததா?-பலமுறை முயற்சித் தேன்,

வழ: இந்தியாவில் அரபு பாடசாலையில் படித்தீரா? -ஆம் 1941 முதல் 1949 வரை படித்தேன். ஒரேபாட சாலையிலல்ல.

வழ: இலங்கையில் மௌ லவி பட்டம் பெற 7 வரு டம் எடுக்கும்?-10 வருட மும் செல்லும், குறையவும் படிக்கலாம்.

வழ: உமக்கு மௌலவி பட்டம் கிடைத்ததா? ஆம்.

வழ: அந்த பரீட்சை பத் திரம் இருக்கிறதா? ஆம்.

விசாரணை இன்று காலை 9-30 மணிக்கு தொடர்ந்து நடைபெறும்.

## சென்றவர் பிணமானார்

பூநகரி, ஞாயிறு

வயலில் நெல்விதைப்பதற் காக தனது மனைவி பிள்ளை களுக்குச் சொல்லிவிட்டு பூந கரிக்கு வந்த ஒருவர் பிண மாகக் கொண்டுவரப்பட் டார்.

மேற்படி சம்பவத்துக்குள் ளானவர் உடுப்பிட்டியைச் சேர்ந்த ஆ. இராசையா என்னும் இளைப்பாறிய ஆசி ரியராவார். இவர் பூநகரியி லுள்ள தனது வயலுக்குப் போய் நெல் விதைத்தபின் வரும்வழியில் ஒரு வயலுக் குள் இறந்துகிடக்கக் காணப் பட்டார். இவர் அருகே விதைத்து எஞ்சிய நெல்லுச் சாக்கும் கையில் இறுகப் பிடித்தபடி ஒரு குடையும் காணப்பட்டது.

இவருடைய மரணம் சம் பந்தமாக பூநகரி திடீர் மரணவிசாரணை அதிகாரி திரு. ரி. பரமசாமி விசா ரணை நடத்தினர். பிரேத பரிசோதனையின்பின் இய ற்கைமரணம் எனத் தீர்ப் பளிக்கப்பட்டது.

## சேவை நலம் பாராட்டு

யாழ்ப்பாணம், திங்கள்

குமரபுரம் சைவவித்தியா லயத்தில் சுமார் 10 ஆண்டு காலம் கடமையாற்றிய திருமதி மீ. சுந்தரலிங்கத் திற்கு சேவை நலம் பாரா ட்டு அளிக்கப்பட்டது

தலைமையாசிரியர் திரு. ஆர். மீ. சுப்பிரமணியம் வைபவத்திற்கு தலைமைவகி த்தார், கிளிநொச்சித் தொகுதி எம். பி. திரு. வீ. ஆனந்தசங்கரி விழாவில் கல ந்துகொண்டு பாராட்டுரை வழங்கினர். திருவாளர்கள் மு சுப்பையா, வை நட ராசா, வே. சுப்பிரமணியம் உட்படப் பலர் சேவைநலம் பற்றிப் பாராட்டிப் பேசி னர்.

(குவிம)

......

## நேர்முகப் பரீட்சை

கிளிநொச்சி, ஞாயிறு

இலங்கைப் போக்குவரத் துச்சபையினர் பொறியியல் பகுதி ஊழியர்களைத் தெரிவு செய்வதற்காக மாவட்ட ரீதியாக நேர்முகப் பரீட்சை நடத்தி வருகின்ற னர்.

வடபகுதியிலிருந்து விண் ணப்பித்தவர்களுக்கான நேர்முகப் பரீட்சை இம் மாதம் 26-ந் திகதி நடை பெறுமென்று அறிவிக்கப் பட்டுள்ளது.

கோண்டாவில் இ. போ. ச. பணியகப் பொறியியற் சாலையில் மேற்படி பரீட்சை நடை பெறவுள்ளதாகவும் தெரியவருகிறது.

மறுநாள் 'டைம்ஸ்' பத்தி ரிகையில் மட்டும் அமைச்சர் குமாரசூரியர் பேசியதின் சாரம் வெளியாயிற்று. மந் திரி சகாக்கள் எல்லாரும்வந் திருந்து கேட்கவேண்டிய பிரசங்கம்என்று அவர்குறிப் பிட்டார். 'ஒப்சேவர்' பத் திரிகையில் இப் பிரசங்கம் பற்றி ஒரு வார்த்தைகூட இல்லை. ஸ்ரீ பார்த்தசாரதி பேசியதை ஆங்கிலப்பத்திரி கைகள் எல்லாம்இருட்டடிப் புச் செய்துவிட்டன,

பயனுள்ள இவ்வித பிரசங் கங்களுக்கு, அதுவும் இந்து சமய அறிஞர்கள் வந்துபேசு வதற்கு இடம் சிறிதும் கொடுக்கக்கூடாது என்ற கொள்கையை அவைபின்பற் றுகின்றனபோலும்! பொது மக்கள் இப்பேச்சின் முக்கி யத்தை அறிந்து அதிகமாக வந்துகேட்கின்றனர்.

இந்துக்கள்மட்டுமல்ல. பல சமயத்தவரும் வந்துஇதைக் கேட்டுப் பயனடைகின்ற னர், பார்ஸி வகுப்பைச்சேர் ந்த ஒரு பிரமுகர் இப் பிர சங்கங்களைக் கேட்டுவிட்டு, மிகப் பயனுள்ளதாகவும், மனதில்பதியத்தக்கதாகவும் இருப்பதாயும், தாம்தொடர் ந்து சென்று கேட்பதாயும், மக்கள் குலமனைத்துக்கும் பயன்படக்கூடிய பேச்சென் றும் சொன்னர். ஆனல், 'டெயிலிநியூஸ்' பத்திரிகை யில் இதைப்பற்றி ஒருவார்த் தையும் வெளியாகவில்லை என்று பலர் புகார் கூறினர்.

"தீ மிதியலைப்பற்றி பத்தி பத்தியாக எழுத இடமளிப் பர்" இதற்குத் தெய்வஅருள் தேவையில்லையென்றும், அது ...காங், ஜப்பான், கொரியா, முதலிய இடங்களில் 10 வாரம் சுற்றுப்பிரயாணம் செய்கின்ருர். மேற்கு நாடு களுக்கும் அடுத்த வருட ஆரம்பத்தில் செல்ல இருக் கிருர்.

தீபாவளி முடிந்ததும், யாழ்ப்பாணத்துக்கும் வந்து இரண்டல்லது மூன்று நாட் கள் அவர் பேசலாமென்று தெரிகிறது அவர் பேசுகை யில், சிறிது சந்தடி ஏற்படு வதையும் அவர் விரும்புவ தில்லை. ஒழுங்கு முறையில் மிகவும் கண்டிப்பு. பிரார்த் தனையின்போது எழுந்து நிற்கத் தேவையில்லை என்றும் அமைதியே முக்கிய மென்றும் வற்புறுத்துகின் ருர்.

உருத்திராட்ச மாலையை சேட்டுக்கு மேல் அணிந்து அவர் மேடைமீது நிமிர்ந்து உட்கார்ந்திருக்கும் காட்சியே மனதைக் கவர் கின்றது. அவர்பேச்சுதமக்கு மனநிம்மதி அளிப்பதாகவும் ஆகையால் இதைத்தொடர்ந்து கேட்கச் செல்லுவதாவும் சொல்லுகிருர் அன்பர்.

பல்கலைக்கழகங்களில் இவ் வித பிரசங்கங்களுக்கு ஏற் பாடு செய்வது மிகவும் பயனளிக்கும்.

0 0 0

பொன்றயங் கிலங்கொளிந்
நலங்குளிர்ந்த புன்சடை.
பின்றயங்க ஆடுவாய்
பிஞ்ஞகா! பிறப்பிலீ!
கொன்றயம் முடியினய்!
கூடலாலவாயிலாய்!
நின்றயங்கி யாடலே
நினைப்பதே நியாயமே.

— சம்பந்தர்

# விபத்துக்களை தடுக்க தேசிய பாதுகாப்பு சபை

கோட்டை, ஞாயிறு

தேசிய பாதுகாப்புச்சபை யொன்று விரைவில் நியமிக் கப்படவிருக்கிறது. கொழும்பு போக்குவரத்து பொலிசார் இச்சபை சம்பந் தமாக அரசாங்கத்துடன் ஆலோசனை நடாத்தி வருகின்றனர்.

வீதி விபத்துக்களையும் மற்றும் தொழிற்சாலைகள் வீடுகள் ஆகிய இடங்களி லும் ஏற்படும் விபத்துக் களையும்குறைப்பதே மேற் படிசபையின் நோக்கமா கும்

நாட்டின் சகல படைகளி லும் இருந்து அங்கத்தவர் கள் இச்சபையில் இடம் பெறுவர். செஞ்சிலுவைச் சங்கம் போன்ற நிறுவனங் களில் இருந்தும் பிரதிநிதி கள் இச்சபையில் இடம் பெறுவர்.

## யாருடையது?

யாழ்ப்பாணம், திங்கள்

இறப்புக்கோர்வை ஒன்று ஸ்ரான்லி வீதியிலிருந்து திரு. ஆர். சந்திரசேகரம் என்பவரால் கண்டெடுக்கப் பட்டு 'ஈழநாடு' காரியா லயத்தில் ஒப்படைக்கப் பட்டுள்ளது. உரியவர் வந்து பெற்றுக்கொள்ளவும்.

## கயரோக நிவாரண போட்டியில் முதல்இடம்

பண்டத்தரிப்பு, ஞாயிறு

வலிகாமம் மேற்கு கயரோக நிவாரண சங்கத் தினர் நடாத்திய புதிர்ப் போட்டியில் இளவாலை மகா வித்தியாலயத்தினர் முதற் பரிசைப்பெற்றனர் பண்டத் தரிப்பு மகளிர் கல்லூரி யினர் இரண்டாம் இடத் தைப் பெற்றனர்.

......

## சர்வதேச சிறுவர் தினவிழா

யாழ்ப்பாணம், திங்கள்

உருத்திரபுரம் காந்தி நிலை யத்தில் நாளை சர்வதேச சிறு வர் தின விழா கொண்டா டப்படவிருக்கிறது.


இப் பத்திரிகை "ஈழநாடு" லிமிடெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேலை வீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1970-ம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 19-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org